2649

21 SEP

நவமணி.

எல்லாம் தெய்வச் செயல்

உள்நாடு ரூ 1

வெளிநாடு ரூ $1\frac{1}{2}$

ஆசிரியன் சி.ரா.ம இராமநாதன்

NAVAMANI.

(A High Class Tamil monthly)

PALLATUR, RAMNAD Dt. S. INDIA.

Vol. 2. பிரமோதூத-வூ மாசி-மீ No 2.

பொருளடக்கம்.

எண்.	விஷயம்.	பக்கம்.
1.	கடவுள்வணக்கம்.	41
2.	'நவமணி' வாழ்த்துப்பா:— திரு. அ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள்.	42
3.	பொருளாதார நிலை. (தலையங்கம்.) பத்திராதிபர்.	43
4.	பைந்தமிழுக்குப் பெருந் தொண்டுபுரிந்த பன்னிரு செல்வர்கள்:— பார்க்கடலோன் தொகுத்தது.	48
5.	ஒழுக்கம்:— திருவாளர். எஸ். சோமசுந்தரபாரதியார் அவர்கள் எம். ஏ., பி. எல். மதுரை.	50
6.	ஆந்திரநாடு:— கோவை. திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள்.	52
7.	பெண்களுக்கு பத்துப்போதனைகள்:— டர்பன் சரஸ்வதிசபைத் தலைவர், திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள்.	55
8.	ஓய்வுநேரத்தை உபயோகிக்கும் முறை:— எஸ். திருமலை அய்யங்கார் அவர்கள்.	57
9.	சமாதான விவரங்கள். (ஊழியன்.)	59
10.	கம்பராமாயணக் கதிர்மணிக் கோவை:— நாரணன் நவில்வது.	68
11.	கனகவல்லி அல்லது கன்வர்கவர்ந்த கன்னிகை:— கோவை. திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள்.	70
12.	அபிப்பிராயங்கள்.	74
13.	மதிப்புரை.	75
14.	மணியொளி (குறிப்பு.) பத்திராதிபர்.	77
15.	நாற்றிசை நடப்பு.	79

சந்தாதாருக்கு அறிவிப்பு.

வெளிநாட்டில் புதிதாய்ச் சந்தா செலுத்திய யாவருக்கும் பத்திரிகையை அனுப்புகிறோமானபோதிலும் எவருக்கேனும் பத்திரிகை கிடைக்காமலிருந்தால் அவர்கள் ரூபாய் செலுத்திப் பெற்றுள்ள ரசீது நம்பரைக் குறித்துச் சரியான விலாசந் தெரிவித்தால் உடனே பத்திரிகை அனுப்பப்படும். சிலர் ரூபாயைமட்டும் அனுப்பி விலாசம் அறிவிக்காமலிருக்கின்றனர். யாவரும் ரூபாய் அனுப்பும் பொழுதே சரியான விலாசத்துடன் கடிதமொன்றும் எழுதவேண்டுகிறோம்.

கடவுள் வணக்கம்.

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன—தனதான.

களப மொழுகிய புளகித முலையினர்
கடுவு மமிர்தமும் விரவிய விழியினர்
கழுவு சரிபுழு கொழுகிய குழலினர்   எவரோடும்
கலக மிடுகய லெறிகுழை விரகியர்
பொருளி லிளைஞரை வழிகொடு மொழிகொடு
தளர விடுபவர் தெருவினி லெவரையும்   நகையாடிப்
பிளவு பெறிலதி லளவள வொழுகியர்
நடையி னுடையினி லழகொடு திரிபவர்
பெருகு பொருள்பெறி லமளியி லிதமொடு குழைவோடே
பிணமு மணைபவர் வெறிதரு புனலுணும்
அவச வனிதையர் முடுகொடு மணைபவர்
பெருமை உடையவர் உறவினை விடஅருள்   புரிவாயே
அனையி னுறைபுலி பெறுமக வயிறரு
பசுவி னிரைமுலை அமுதுண நிரைமகள்
வசவ னெடுபுலி முலைஉண மலையுடன்   உருகாநீள்
அடவி தனிலுள உலவைகள் தளிர்விட
மருள மதமொடு களிறுகள் பிடியுடன்
அகல வெளிஉயர் பறவைகள் நிலம்வர   விரல்சேரேழ்
துளைகள் விடுதழை விரன்முறை தடவிய
இசைகள் பலபல தொனிதரு கருமுகில்
சுருதி உடையவ னெடியவன் மனமகிழ்   மருகோனே
துணைவ குணதர சரவண பவநம
முருக குருபர வளரறு முககுக
துறையி லலையெறி திருநக ருறைதரு   பெருமாளே.

நவமணி இரண்டாம் ஆண்டு வாழ்த்துப்பா.

பூளைமேடு, தமிழ்ப்பண்டிதர்

திரு. அ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பாடியது.

வண்ண விருத்தம்.

தனத்தந் தானன தானன தானன
தனத்தந் தானன தானன தானன
தனத்தந் தானன தானன தானன—தனதான.

அருமைச் செந்தமிழ் நாடதன் மேனிலை
வருதற் குற்றொரு நல்வழி நாடொறு
அறிதற் காமுறை அன்புட னுய்வரு—தமிழ்நாதன்
அரிதில் சேர்முயற் சித்திர னுமொரு
வகையில் நாட்டினில் நற்பணி செய்யவே
அடையும் வீரமுந் தீரமுஞ் சேர்திரு—ராமநாதன்
தரையில் நாடெலாம் தன்னுரிமைத்திரு
தழுவுந் தன்னர சாட்சியி னின்பது
தமிழ்நா டென்றமே சேர்வகை தீட்டுமோர்—ஆசிரியன்
ததும்புந் தன்னுள பக்தியின் மேலெழு
தகைவில் வெள்ளமோர் கால்வழி நேர்முகம்
தழைத்துச்செல்லவேகற்பினில்கண்டனன்-நவமணியே
அருளில் ஓர்வரு டக்குழந்தையுமாய்
தமிழர் நெஞ்சினில் தண்ணளி கொள்ளவும்
தவழ்ந்தீ ராண்டமை சேய்நடந் தின்புறல்-காண்குவமே
அரசார் அச்சுறுத்தும்பல சட்டமும்
அனுகாத் தந்திர முந்திற முங்கொடு
அமைத்தான்முன்யினில் நல்லுரிமைத்திரு-தேவியையே
விரவும் பல்பல கட்டுரை சேர்மணி
வியப்பாய் நல்லறி ஞர்சொலு முள்ளினில்
ஒளியாய்க்கொண்டுமேசெந்தமிழ்நாட்டினில்-ஓங்கியதே
விழையும் அன்பரின் சொல்லிருந் தாய்நவ
மணிநம் தாய்த்திரு நாட்டுரை மைப்பணி
விருப்பில் ஆற்றுக வாழுக, வாழுக—பல்லாண்டே.

உ

எல்லாம் தெய்வச்செயல்.

'நவ மணி'

பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே. [பாரதியார்]
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார்கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. [திருவள்ளுவர்]

மாலை 2. } பள்ளத்தூர், பிரமோதூத, மாசி. { மணி 2.

பொருளாதார நிலை.

ஓரோர் தனிப்பட்ட மனிதனோ அல்லது நாடோ முன்னேற்ற மடையவேண்டுமானால் அவரவர்களின் பொருளாதார நிலையை விருத்திக்குக் கொண்டுவந்து அவரவர்களின் வரவுக்குத் தகுந்த செலவைக் கையாடவேண்டும். அந்நிலை தவறி ஏனைய ஒருவரையோ அல்லது நாட்டையோ போன்று நாமும் வாழ எண்ணி வரவுக்கு மீறிச் செலசெய்வோமேயானால் நமது தமிழ் மூதாட்டியான ஔவையார் சொன்ன 'ஆனமுதலிலதிகஞ் செல வானால்......' என்ற பாட்டிற்கு இலக்காக நேரிடும். எல்லார்க்கும் கள்வனும் என்றென்றைக்குந் தீயனும் வாழும் வாழ்க்கையைக் கைக்கொள்ள ஒருவரும் மனமார விரும்பாராயினும் தற்கால உல கினரின் வாழ்க்கை வரவுக்கு மிஞ்சிய செலவிலேயே பெரும்பா லும் செலவாவதால் உலகில் ஒரு சிலர் நீங்கலாக மிகமிக அதிக மான பேர், அல்லது நாடுகள் தங்கள் தங்கள் பொருளாதார நிலை யை சீர்படுத்திக்கொள்ள முடியாமல் ஆசை மிகுதியாலும் டம்பத் தாலும் பிறரைவிட உயர்நிலையில் வாழவேண்டுமென்ற கருத்தா

னும் பெருங் கடங்காரர்களாகவும் அமைதியற்றவர்களாகவுமே வாழ்கிறார்கள். இக்காரணத்தாலேயே தற்பொழுது உலகில் எங்கணும் பொருளாதார நிலை தடுமாற்றமடைந்து மிகச்சீர்கேடுற்ற நிலைமையிலிருக்கின்றது. மூதறிஞர் யாவரும் மிகத்தெளிவுபடப் பொருளாதார நிலை சீர்படவேண்டுமானால் வரவறிந்து வரவிற்குத் தகுந்த செலவையே கைக்கொள்ள வேண்டுமென மிக வற்புறுத்திச் செல்லுகின்றனர்.

ஃ ஃ ஃ

பல்வேறு நூல்களைப் படித்தும் கேட்டும் அநுபவித்தும் வாழும் நாம் இன்று இப்பெருவுலகில் எவரை நோக்கினும், எந்நாட்டை நோக்கினும், நீங்கள் சௌகர்யமா? உங்கள் நாடு சௌகர்யமா? என்று கேட்டால், ஆமாம். ஆயினும் பொருளாதார நிலைதான் கெட்டுவிட்டது என்றே பதிலளிக்கு முறையில் யாவரும் வாழ்கின்றனர். சற்று இவ்விடத்தில் நிதானித்துப் பாருங்கள். மனிதன் தான் பெற்றதைப் பெரிதாகக்கொண்டு தனக்குக் கீழுள்ளவனிலும் தன்னை உயர்த்தி வைத்ததற்காக ஆண்டவனை மனமார வாழ்த்தி வணங்கி சந்தோஷமாகவும் திருப்தியாகவும் பெரு நோக்கோடும் வாழ எண்ண வேண்டுவதே முறை என்பதை மறந்து நம்மினும் உயர் நிலையிலுள்ள ஒவ்வொருவரையுங் கண்டு அந்நிலை யடையப்பாடுபட்டுத் தன் கையிலுள்ள சிறுமுதலையும் வாரி இறைத்துப் பலனெதிர்பார்க்கு முன் மாண்டுபோவதே உலகியல் வழக்கமென்பதை நன்குணர்ந்தும், எல்லோரும் எல்லா நாட்டவரும் அப்பொறாமைக் களஞ்சியமான மனோராஜ்ய நிலைமையையே கைக்கொண்டதனாலல்லவோ இன்று உலகெங்கணும் பொருளாதார நிலை இச் சீர்கேடுறக் காரணமாயிற்று.

ஃ ஃ ஃ

திருஷ்டாந்தமாக ஒன்று கவனியுங்கள். ஏற்கனவே நடந்த பெரும் யுத்தம் எதற்காக ஏற்பட்டது? அப்பொறாமையெண்ணமல்லவோ அப்பெரும் யுத்தத்தை உண்டு செய்து உலகிலுள்ள பல்வேறு வல்லரசுகளையும் கடன்காரர்களாக்கிற்று. இப்பெரும் ஐரோப்பிய யுத்தத்திற்கு மூலகாரணரான ஜர்மானியர் தாங்கள்

நாடு பிடிக்கவேண்டுமென்ற ஆசையைக் கொள்ளாமல், அதற்காகச் செலவு செய்த பணத்தையும், காலத்தையும், கொள்ளை கொடுத்த மனிதரையும் வைத்து தங்கள் நாட்டை விர்த்திசெய்யும் முறையில் அப்பொருள்களை எல்லாம் ஈடுபடுத்தியிருப்பார்களேயானல், இன்று அந்நாடு எவ்வளவு உயர்நிலை எய்தியிருக்கும்? அதற்குமாருகச் சிரமங்கள் பலவும் பொருளாதாரக் கேடும் பெற்று பெருங்கடன் வாங்கவும் ஏதுவானது எதனல்? கவனியுங்கள்! தனக்கு இறைவன் கொடுத்ததைக்கொண்டு திருப்தியடையாது நாட்டாசை பிடித்துத் தன் கைப்பொருள்களை இறைத்ததாலல்லவோ, இன்று அந்நாடும் அதில் ஈடுபட்ட சில நாடுகளும் சிரமமுறக் காரணமாயிருக்கிறது.

ஃ ஃ ஃ

எதையுமடைய நாம் முயற்சி செய்யவேண்டுவது இன்றியமையாததாயினும், நமது நிலையறிந்து நமக்கு இவ்வளவு கிடைத்தால் போதுமென்ற ஓர் திருப்தியுடன் ஓர் குறிக்கோள் வைத்துக்கொண்டு அம்முயற்சியை எக்காரியத்திலும் செய்யவேண்டுமேயல்லாமல், ஆயுள் பரியந்தம் அளவில்லாமல் தேடுவது என்ற ஒன்றையே கைக்கொண்ட முயற்சியாளன் அவன் ஆயுளின் அளவையுமறியாமல், தேடியதையும் அனுபவியாமல், முயற்சியிலேயே மாளுகின்ருன். அம்முயற்சியும் பிரயோஜனமில்லை. எதற்கும் ஓர் எல்லைவேண்டும். எல்லையற்ற எதுவும் வரம்பு கடந்த வீணை காரியமாகவே முடியும்.

ஃ ஃ ஃ

தற்பொழுதைய உலகில் பொருளாதார நிலை இவ்வளவு சீர்கெட்டிருந்தும் ஒவ்வொரு நாட்டிலும் நாணயவிலை நடுநிலைமையற்றும் விளைபொருள் விலை குறைந்தும் கஷ்டமுற்று வாழும் மக்களிடைப் பலப்பல புதிய வரிகண்டு அதிக வரிவாங்கி ஒவ்வோர் வல்லரசுகளும் தங்கள் தங்கள் சக்தி மீறிய யுத்ததளவாடங்களை அதிகப்படுத்துவதிலும் சைன்யங்களை மிகுதியாக்குவதிலும் இராணுவச் செலவு கணக்கற்றுச் செய்வதிலுமே தற்பொழுது கருத்துச் செலுத்தப்படுகிறதல்லாமல் இரண்டொருவர் நீங்கலாக ஏனையோர் தங்கள் நாட்டின் பொருளாதார நிலையைக் கவனிக்கவே

யில்லை. இங்ஙனம் இருக்கும் பொருளையும், போதாமல் கடன் வாங்குந் தொகையையும், யுத்த தளவாடங்களில் தங்கள் நாட்டைக் காப்பதற்கென்ற பெயரைச் சொல்லிக்கொண்டு ஒவ்வொருவரும் செலவு செய்ய ஆரம்பித்தால் நாட்டின் க்ஷேமம் எங்குள்ளது? பொருளாதார நிலை எங்ஙனம் சீர்பெறும்?

ஃ ஃ ஃ

அரசாங்கங்கள் அவ்வேலையிலீடுபட்டுள்ளதால் அரசாங்கத்தைச் சார்ந்த பெரிய மனிதர்கள் எனச் சொல்லப்படுவோர் யாவரும், எல்லா நாட்டிலும், தங்கள் தொழில்களில் கருத்தைச் செலுத்தாமலும், அரசாங்கத்தாரின் உதவியிருக்கிறதென்ற உதார குணம் படைத்த எண்ணமொன்றே எஞ்சிநிற்கத் தங்கள் வாழ்நாளை நிலையறியாமல் இந்திரபோகமனுபவிக்கும் யந்திரம் போன்று செலவழிக்கிறார்களே யல்லாமல், நாமும் பகுத்தறிவு பெற்ற மக்கள் தானே, நம் நாடு எந்நிலையிலுள்ளது? நாம் என்ன செய்கிறோம்? நமது அரசாங்கம் எதில் கருத்தைச் செலுத்துகிறது? மக்கள்யாவரும் ஏன் பணக்கஷ்டத்திற் காளாகியுள்ளனர்? நம் நாடு ஏன் கடன் வாங்குகிறது? என எண்ணுவாரில்லை. எண்ணும் ஒன்றிரண்டு பேரும் பக்க பலமற்றுப் பதறுகிறார்கள்.

ஃ ஃ ஃ

ஏழை மக்களோ, தொழிலாளர்களோ, விவசாயிகளோ வெனில் என்றும் போல் கஷ்டப்பட்டுக் கொண்டேவந்து வரிப் பளுவால் தாங்கமுடியாத நிலையுற்று வாழும் பொழுதும் நாட்டில் மென்மேலும் புதிய பல செலவினங்கள் தோன்றுகின்றன. கைவசமுள்ள வெள்ளி, பொன் விலையோ நிதானவிலை இழந்ததுமல்லாமல், தாங்கள் கஷ்டப்பட்டு விளைவித்த விளைபொருள்களும் நாளுக்கு நாள் விலை குறைந்துகொண்டே வருகின்றன. விலை பொருள்கள் விலை குறைந்தால் வரி குறையும். அரசாங்க உத்தியோகஸ்தர்களின் சம்பளங்குறையும். உலகில்சிக்கனப்பெருக்குண்டாகும். நாடு சிக்கனமடையும் என்ற எண்ணமோ பகற்கனவை யொத்ததாக விருக்கின்றது. என் செய்வது தெய்வமே! என ஏங்குகின்றனர்!

ஃ ஃ ஃ

இக்கஷ்ட நிலைமாறிப் பொருளாதாரச் சீர்பெறும் நிலைவர என்று இறைவன் கிருபை செய்கிருனே, அன்றே உலகியல் சிறப்புறக் காரணமாகும். தனி மனிதனைப்பற்றியவரை ஒவ்வோர்வரும் நிலையுணர்ந்து ஆனமுதலிலதிகஞ் செலவு செய்து கடனுண்டுவாழாமை காண்டலினிதேயல்லாமல், மட்டிலா ஆசைபற்றி ஆசையின் அடிமையாய் வாழ்தல் கூடவே கூடாது என்பதை உணர்தல் வேண்டும். நூதனமாகத் தோன்றும் பல்வேறு சூழ்ச்சிகளிலும் ஆடம்பரச் செலவுகளிலும் சிக்கி நம்மினும் உயர் நிலையிலுள்ளாரைக் கண்டு மதிமயங்காது, கையிலுள்ளதைக்கொண்டு திருப்தியுடன் வாழப் பழகுதல் வேண்டும். நம்மினும் தாழ்ந்தவரைக் கண்டு நம்மை இறைவன் இவ்வளவு உயர்நிலையில் வைத்ததற்கு அவரைச் சதா துதி செய்தல்வேண்டும்.

ஃ ஃ ஃ

ஒவ்வோர் நாடும் தங்கள் தங்கள் நாட்டை விர்த்தி செய்வதிலும் கைத்தொழிலை ஓங்கச் செய்து ஏனைய நாட்டவரிடம் நமது பொருள் போகாமல் நமது நாட்டிலேயே ஓடித்திரியும் வழிகாண வேண்டும். பிற நாட்டாசையை மறக்கவேண்டும். நம் நாட்டின் பொருளாதார நிலை சீர்பட நாணயச்செலாவணியை ஒழுங்குபடுத்தி நடுநிலைமையில் வைக்கவேண்டும். தானிய விலையில் கட்டுப்பாடும், விளைவில் விருத்தியும் வேண்டும். பாதுகாப்புப் படைக்கென அரசாங்கச் செலவுமேன் மேலும் விர்த்தியாகாமல்நிதானப்படுத்த வேண்டும். வீண் ஆடம்பரங்களையும் மக்கள்வலிமையைக் குறைக்கும்நூதன சிருஷ்டிகளையும் அகற்றல் வேண்டும். மக்கள்நலனையும் அவர்களின் வலிமையையும் மிகுதிப்படுத்தும் வழிகளைக்கைக் கொள்ளவேண்டும். அரசாங்கம் என்றும் பொருளாதார நிலையில் கண்ணுங் கருத்துமாக விளங்கவேண்டும். அங்ஙனம் ஏற்படுமேயானல், பொருளாதார நிலை சீர்பெறும்.

பைந்தமிழுக்குப் பெருந் தொண்டுபுரிந்த பன்னிரு செல்வர்கள்.

பார்க்கடலோன் தொகுத்தது.

II

கம்பர் சிவிகையைப் பாண்டியன் சுமந்த வரலாறு.

காசினியோர் போற்றும் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் சோணாட்டு இறைவனாகிய சோழர்பிரானது ஆதிக்கத்தில் அவனது அவைக்களத்துத் தலைமைப் புலவராக அமர்ந்து அப்பேரவையைப் பெரிதும் அலங்கரித்தும், சோழர் பெருமானைத் தமிழ்கலா விநோதத்தால் இன்புறுத்தியும் வந்தனர். இங்ஙனம் வரும் நாளொன்றில் புலவரேறாகிய கம்பநாடருக்கும், புவியரசராகிய சோழனுக்கும் எதுவிஷயத்திலோ பிணக்குண்டாய் மனத்தாங்கல் நேரிட்டு அதுகாரணமாகக் கம்பர் சோழனுடன் கோபித்துக் கொண்டு சோழநாடு நீங்கி முத்துப் பெருக்குடையதும், வைகை நதி சிறந்ததும், ஆலவாயடிகள் அறுபத்துநான்கு திருவிளையாடல்கள் செய்தருளியதும், தமிழ் முனியாகிய அகத்தியர் இனியமர்ந்துறையும் பொதியமலையுடையதும், பார்வதிதேவியார் தடாதகைப் பிராட்டியாராக அவதரித்துச் சோமசுந்தரக் கடவுளைத் திருமணம் செய்துகொண்ட திருத்தலமும், வேப்பமாலையணிந்த பாண்டியன் அரசு செய்வதும், தமிழ்வளஞ் சிறந்ததுமான மதுரைமா நகரத்து மாறனைக் காணச் சென்றார். இப்பெரியாரது அரிய வரவினைப் பாண்டியன் ஒற்றரால் உணர்த்த உணர்ந்து அவர் தந்தகுதிக்கேற்ப அவரை உபசரிக்கவேண்டுமென்ற பேரன்பாலும், தண்டமிழ்பாலுள்ள தளராக் காதலாலும் தூண்டப்பெற்று தனது பட்டமகிஷியுடன் யாரும் அறியாமல் அரண்மனை நீங்கி கம்பர் ஊர்ந்துவரும் சிவிகையைச் சார்ந்து அச்சிவிகையைச் சுமப்பவர்களுடன் தாங்களும் கூடிச் சுமந்து வந்தனர். இதனை அருகிருந்தார் புலவர்க்குணர்த்த புலவர் சரேலென்று சிவிகையினின்றும் இறங்கி அவர்கள் அருந்தமிழ்பால் கொண்டுள்ள அளப்பரிய

அன்பிற்கும், அறிய தொண்டிற்கும் மிகவும் அதிசயித்துத் தமிழ்மணம் கமழும் தமது திருவாக்கால் பாண்டியனையும், அவன் பத்தினியையும் புகழ்ந்து பாடினர். அப்பாடல்கள் அடியில் வருமாறு:—

வெண்பா.

வாங்கு திரைகடலேழ் மஞ்சனநீர் வான்வரையின்
ஓங்கு மகாமேரு வுண்டியற்கல்—வீங்குபுகழ்
இந்திரன்சம் பந்தி யிறையவனும் பண்டாரி
சந்த்ரகுல வங்கிசநீ தான்.

வெண்பா.

உடையவளு நீயு மொருங்கொட்பை யொப்பை
உமையவளுக் குண்டங்கோ ரூனம்— உமையவடன்
பாகந்தோய்ந் தாண்டான் பலிக்குழன்றான் பாண்டியனின்
* பாகந்தோய்ந்தாண்டான் பதி.

இவ்வெண்பா 'தமிழ் நாவலர் சரிதை'யில், "பாண்டியனும் தேவியும் பல்லக்குச் சுமக்க அப்போது கம்பர் பாடிய வெண்பா" என்னுந் தலைப்பின் கீழ்க் காணப்படுவதால் இச் சம்பவம் உண்மையென்பது உறுதிப்படுகின்றது.

கம்பர் சோழநாடு நீங்கிப் பாண்டியநாடு சென்றதற்குச் சிலர் வேறுகாரணங் கூறுவர். அது பொருந்தாது.

இங்ஙனம் கம்பர் பாண்டியனால் பெரிதும் உபசரிக்கப்பட்டுப் பின்னர் பாண்டியன் அரண்மனைக்கு எழுந்தருளியிருந்தனர்.

---

* 'பாண்டியன் ஆகந்தோய்ந்தாண்டான் அரசு' எனவும் பாடம்.

ஒழுக்கம்.

திருவாளர் எஸ். சோமசுந்தரபாரதியார் அவர்கள். எம். ஏ. பி. எல்.

(26-ம் பக்கத் தொடர்ச்சி.)

அவ்வத் தொழிற்றொகுதி சமுதாயக்கூட்டுறவுக்கான்ற நிறை ஒழுக்கறங்கள் அமையவேண்டும். துறைதொறும் நல்லறவுணர்ச்சி நிறுவாக்கால், உறவு நிலையாது. யாண்டும் மக்களியல் கூடிவாழுங் குணவயத்ததாகலான், அவர்தங் கூட்டுறவுக் குறுதுணையாம் ஒழுக்கறமும் அப்பொதுக் குணத்திற்கியைபு வேண்டும். பொதுவற அமைந்த விதியற வொழுக்க மெதுவும் மக்கள் கூட்டுறவே பொருளாகக் கொள்ளாமற் பிற நோக்குங் கருதி நிற்கும்: அனைத்தளவில் அவ்வறங்கள் கூட்டுறவுப் பெருநலத்திற் கூறு செய்யும்.

பேத சமய வாத நோய்கள் பிணியாமல் அறவொழுக்கம் 'பரிந்தோம்பிக் காக்கப்படல்' வேண்டும். கூட்டுறவு மக்கள் வகுப்பின் பொதுவியலாகவே, அதன் தொடர்புடை ஒழுக்கமும் அவர் தம் மினவளவில் நேர் பொதுமை நிலையுடைமை நேடல் வேண்டும். 'சமயகோடிகளெலாம் எங்குந் தொடர்ந் தெதிர் வழக்கிடு'ந் தருக்குடைய. பொதுநலமும் போர்ச்செருக்கும் புணர்வதனால், இரண்டினுக்கு மினிமையில்லை.

மேலும், சமயங்கள் கடவுள் உயிர்ச் சம்மந்தங் கதுவி நிற்கும்: ஒழுக்கமோ மக்கணனி கூட்டுறவின் நலங்கருதி அவர் தம்முள் அறம் வகுக்கும். பசுவுயிர்கள் பதியடையும் பாடாண்மை பாராட்டு மதங்களெங்கும். மக்களின் நலம் வளர்க்க அவர் தம்முட் பொது வாழ்வின் இயலுயர முழுதுதவும் ஒழுக்கம் என்றும். வழங்குவது வீடென முழங்குவன சமயம்: கூடியுறை மக்கள் பீடுபெற உதவுவது ஒழுக்கம். அம்மை அகவி இம்மமையை இகழ்வது சமயம்: எம்மையு மிகழாது இம்மையை செம்மை செய்வதொழுக்கம், மறுமை மதப்பொரு மிதத்தால்

இகத்துண்மை மறுத்து இனிய வாழ்வையும் வெறுப்பது சமயம்: இயற்கை வளம் இறைவனுள மென இகழா தனவரத நலநுகர உறவறத்தை மக்கள் தமக் குதவுவதே ஒழுக்க நோக்காம்.

இன நலத்தோடியையு முறை தனியுயிரைச் செம்மை செய்யுஞ் சமயநெறி அற ஒழுக்கோடல்லாதல்ல. தனித்த உயிர் பிறதுலகோ ரின்பமெனப் பேண ஈண்டைக் கூட்டுறவின் பெருநலத்தை அறைபோக்கு மவ்வளவில் மதக்கோள்கள் ஒழுக்கத்தோடொன்றி நில்லா. பொதுவறமாம் ஒழுக்கத்தின் செம்முறை சேர் சமயநெறி நன்ருற்றும்: மத மருவிப் பிளவுவளம் பெற்றமையுமொழுக்க வகை அறத்தீ தாம், பீழை செய்யும். மெய்ம் மதத்திற் கறவொழுக்கம் அருந்துணையாம். பொருபலம் தங்கள் ஒரு போது ஒழுக்கப் பகையாய் நிற்கும்.

ஒழுக்கக்கூழ் மத நீரேற்றுயர்வதில்லை. சமயநிலம் அறவொழுக்க எருப் பெறுமேல் விளையுள் வளக்கொழுமை கொள்ளும். ஒழுக்கம் வேறுபடு சமயங்கள் வித்திவரும் விளையுளில்லை; சமுதாயப் பொதுநலத்தின் முதலாகி முடிவிலதி லினிக்க முதிர் கனியுமாகும். ஒழுக்கம் கூட்டுறவு நலத்தின் காரணமுங் காரியமுமாகி யமையும். சமுதாய 'நன்றிக்கு வித்தாகி', அதன் வளர்ச்சிக்கு மஃதே துணைநின்று, தூய தன் வளப்பத் துறை முறை நிற்பார்க்கு 'விழுப்பம் தரலால்' ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படுவதொன்றும்.

இப்புத்தகங்கள் வேண்டுமோ?

எனது நெடுங்கனவு ரூ.	0—6—0
இரட்டைப் புலர் சரித்திரம்.	0—6—0
தமிழன்.	0—6—0
ஒட்டக்கூத்தர் ஈட்டி எழுபதுபாடிய வரலாறு.	0—2—0
'நவமணி' முதலாவதாண்டு காலிகோபைண்ட்	1—8—0

மானேஜர்,
'நவமணி' பத்திரிகாலயம், பள்ளத்தூர்.

ஆந்திர நாடு.

பதினைந்தாம் நூற்றாண்டின் பாஷையின் நிலைமை.

(கி. பி. 1419—1446.)

கோவை திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள் எழுதுவது.

(24-ம் பக்கத் தொடர்ச்சி.)

பின்னர் பிரபுடதேவராயன் வைணவ ஆச்சாரியரையும் சிவனைத் தூஷித்தவர்களையும் விலக்கிவிட்டு ஜக்கணாச்சாரியருக்கு இரத்தினாபரணங்களையும், ருத்திர கங்கணங்களையும், சாமரசனுக்கு மந்திரிப் பதவியையும் வெகுமதியாகத் தந்து சபையைக் கலைத்தான். இச்சம்பவங்களால் வீரசைவ மதத்தின் பெருக்கும், பிரபந்தங்களின் அபிவிர்த்தியும், புலவர் கூட்டங்களும், கல்வியின் உயர்வும் தேவராயன் காலத்து மேம்பட்டிருந்தன வென்பது தெளிவாகின்றது.

இவனது காலத்தில் வீரசைவமதத்திற்கும், வைணவமதத்திற்கும் மிக்க விரோதம் ஏற்பட்டிருந்தது. அவ்விரோதம் ஸ்மார்த்தமதம், புத்தமதங்களில் புகாமலிருந்தது. சாமரசனுக்கும், குமார வியாசர்களுக்கும், ஸ்ரீநாதனுக்கும், டிண்டிம பட்டருக்கும் நேர்ந்த சம்வாதம் சாஹித்திய சரித்திரத்திற்குச் சம்பந்தப்பட்டதே யன்றி மதசம்பிரதாய வாதமாயிருக்கவில்லை.

"பிரபுடதேவராயன் சாமரசனையும், அவனது மைத்துனர் குமார வியாஸனையும் விளித்து கன்னடபாஷையில் மகாபாரதத்தைக் காவியமாயியற்றும்படி கட்டளையிட்டான். அக்கட்டளையின் படியே அவ்விரு புலவர்களும் மகாபாரதத்தை காவியமாகத் தனித்தனியாகப் பாடிமுடித்து அரசனிடத்துக் காட்டினார்கள். அரசன் அக்காவியங்களின் தகுதியைப் பரிசோதித்து மதிப்புரை கூறும்படி தனது அவைக்களப் புலவருக்கு ஆணையிட்டான்.' அவ்வித்துவான்கள் அவ்விருவர்களின் நூல்களையும் நன்கு ஆராய்ந்து

சாமரசனது எட்டுச்சுவடியில் கவிமணமும், காவிய வாசனையும் மிகுதியாக வீசுவது கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்து அதுவே சிறந்த நூலென்று அபிப்பிராயங்கூறினர்கள். அதுகேட்ட குமார வியாசர் மனம்வருந்தித் தாம் எழுதிய காவியத்தைத் தீயிட்டுக் கொழுத்திச் சாம்பலாக்கிவிடுவது, இன்றேல் உயிரை மாய்த்துக் கொள்வது என்று பிரதிக்ஞை செய்துகொண்டான். இதனை யறிந்த அவனது மனைவி, தனது தமையனை சாமரசன் இயற்றிய பாரத ஓலைச்சுவடியைக் களவுசெய்து அதனை தீவாய்ப்படுத்தினள். பின்னர் விஷயமுணர்ந்த சாமரசன் அவற்றிற்கு வருந்தாமல் வாளா விருந்தனன். தேவராயன் சாமரசனது காவியச்சுவடி கனல்வாய்ப் பட்டிறந்தது கேட்டு மிகவருந்தி, குமாரவியாசனுக்குச் செய்ய விருந்த கனகாபிஷேகத்தைக் கழியரசனுகிய சாமரசனுக்குச் செய்து களிப்பித்தான்" இச்செய்தி வீரசைவப் பிரபந்தங்களாகிய இத்தாஞ்சீசயனுடைய 'குருராஜ சரித்திரத்'திலும், சங்கரகவியால் இயற்றப்பட்ட 'கோரபசுவ சரித்திரத்'திலும் விவரிக்கப்பட்டிருக் கின்றது.

குமாரவியாசன் ஸ்மார்த்தனுகவும், வீரநாராயண பக்தராக வும் இருந்தானென்று "கதுகுபாரதத்"தில் சொல்லப்பட்டிருப்பத னல், இப்புலவன் வீரசைவர் கட்டத்தில் கலந்து பாரத காவியத் தைப் பாடியிருக்கமாட்டாரென்று யூகிக்க இடந்தருகின்றது. ஆந்திரநாட்டில் "போதன்ன பாகவதம்" எங்ஙனம் சர்வஜன அங்கீகாரம் பெற்றிருந்ததோ அதுபோலவே கன்னடதேசத்தில் கதுகுபாரதம் சர்வஜன அங்கீகாரம் பெற்றிருந்தது. குமார வியாசனது கவியமைப்பிற்கும், சந்தம்—அலங்காரம்—வியாகரண நியமங்களுக்கும் கௌரவமில்லா தொழியினும், கவித்வதாட்டி விரைந்த கதியில் தங்கு தடையின்றிச் சுரந்து, சமயோசிதமும் சந்தர்ப்பங்களும் தக்கவிடத்தில் இடம்பெற்றுச் சுவைநிரம்பிப் பொலிவுற்றிருந்ததெனப் புகல்வது மிகையாகமாட்டா. இங்ஙனம் ஆசுகவியில், கவித்வதோரணையில், 'பத்துப்பருவங்களில்' சுருங் கிய கால அளவில் இயற்றி முடிந்ததே அக்கன்னட பாரதம்.

ஸ்ரீநாதன், டிண்டிமபட்டன் ஆகியவர்களின் வாக்குவாதம் சாகித்திய சரித்திரத்தில் இடம்பெற்றிருக்கின்றதென்ற செய்தி

முன்னரே கூறப்பட்டிருக்கிறது. அருணகிரிநாத டிண்டிமன், பிரபுடதேவராயனது பேரன்புக்குரியனாக விருந்தானென்றும், அவன் 'முள்ளண்டரம்' 'தேவராயபுரம்' என்ற இருகிராமங்களை இறையிலியாகப் பெற்று பாரம்பரியமாக அனுபவிக்கும் சுதந்தரத்தை அடைந்திருந்தானென்றும், ஒரு சாஸனம் கூறுகிறது. வமிச பரம்பரையாக டிண்டிம கவிகள் விஜயநகர சபாபதிகளாகவும், சாஸனகர்த்தர்களாகவும், கவிதாசார்வ பௌமர்களாகவும், விருதுடையவர்களாகவும், வித்யாநாதர்களாகவும் விளங்கினார்களென்று அருணகிரிநாதரால் இயற்றப்பட்ட "விபாகரத்னமாலா" என்ற நூலால் அறியப்படுகிறது. பிறநூல்களிலும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள "மூலாண்டம்" என்ற பெயருடைய கிராமம் கல்வெட்டில் காணப்படுகிற 'முள்ளண்டரம்' கிராமமாகவே யிருக்கவேண்டும். ஸ்ரீ அருணகிரிநாதரால் இயற்றப்பட்ட "சோமவல்லி யோகானந்த பிரஹஸனம்" என்ற இனியநூல், நகைச்சுவைமலிந்ததாய் ஏகாந்தத்தை லட்சியமாக உடையதாய் விளங்கியதென்று அதனைக் கற்றுணர்ந்த கவிவல்லார் கூறுகின்றனர்.

நாடகரூபமான அந்நூலுள், அருணகிரிநாதர் பெருங் கவிவாண ரென்றும், அஷ்டபாஷா விற்பன்னரென்றும், அளவில் பெரிய விருதுப்பெயர் பெற்றவரென்றும், டிண்டிமப்பிரபு ராஜநாத தேசிகருக்கும், அபிராமநாயகிக்கும், அருமந்தப் புதல்வராய் உதித்தவரென்றும் கூறப்பட்டிருக்கின்றன. அவ்விருதுப்பெயர்களின் வாக்கியங்களும், விளக்கமும் அடியில் வருமாறு:—

சாஸனவாக்கியம்.

"அஸ்திகல்லு நரேந்திராக்ரஹார நாயகமணே. சாமவேத ஸாம்யாத்ரிகன்ய, அஷ்டபாஷா கவிதா சாம்ராஜ்யாபிஷிக்தஸ்ய, டல்லாளராய, கடககவிகுலகர்வபவதபவே: நரகன்னகவி நாக கேஸரிண, ஸ்ரீகவிப்ரபோ: பௌத்ர: புத்ர: ஸ்ரீராஜநாத தேசிகஸ்ய பிரஹமாண்டபாண்ட பிரசண்ட மண்டலித, விஜயடிண்டிமரவ சண்டிம்ந: ஸ்ரீகண்டாகம சிகண்டமண்டனமணே: ஸ்ரீடிண்டிமப்ரபோ: தௌஹித்ர: ஸ்ரீமதபிராமநாயிகாஸ்த நந்தய: சபாபதி பட்டாரகா சார்ய பாகினேய: ஸ்ரீடிண்டிமகவி சார்வபௌம இதிப்ரதித பிருதுநாமா சரஸ்வதீ பிரஸாத லப்த கவிதாஸநாத: ஸ்ரீமான் அருணகிரிநாத: தேனகிருதேன சோமவல்லீ யோகானந்த நாம்னுப்ரஹஸனேன சபாநியோக மநுதிஷ்டாம்."

(தொடரும்.)

பெண்களுக்கு பத்துப்போதனைகள்.

டர்பன். சரஸ்வதி சபைத்தலைவர்

திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள் எழுதுவது.

பெண்பாவாய்! பொறுமையே பெருத்த பூஷணம். அது தேவராலும், மனிதராலும், மாநிலத்திலுள்ள மங்கையராலும் அடையமுடியா ஆபரணம். அதனை யாவரும், மெச்சத்தரித்துக் கொள்வதே உனக்கு அழகாகும்.

அணங்கே! அதிகமாய்ப் பேசாதே, அதிகமாய்ச் சிரிக்காதே, அதிகமாய்த் தூங்காதே. அளவுக்குமீறி எதையுஞ் செய்துவிட்டு வருத்தப்படாதே!

நல்லோய்! நீ எக்கோவிலுக்கும் போகாதபோதிலும் சரியே. எக்கடவுளை ஸ்மரியாதிருந்தாலும் சரியே. உன் காதற் கண்ணாளனை கடவுளென்றெண்ணி அவனுக்கு ஊழியஞ்செய்தால் உனக்கு மோட்ச முண்டென்று வேதசாஸ்திரங்கள் முறையிடுகின்றதைக் கவனித்து நட.

நாரீமணியே! கம்பிகளில்லா வீணையை வாசிக்கமுடியுமா? சக்கரமில்லாத வண்டியை ஓட்டமுடியுமா? அதுபோலவே உனக்கு கணவனில்லாவிடில் எவ்வித சந்தோஷமும் உண்டாகாது. ஆகவே, கன்னியாயிருக்க விரும்பாதே. இது நல்ல எண்ணமாகாது. இதற்கு உதாரணமாக நர்மதாதேவியை நினைத்துக்கொள்.

பொற்கொடியே! உனது காதற் கண்ணாளன் வெறுப்புற்றிருக்கும்போது அவனாக வலியவந்து உனது சல்லாபத்தை வேண்டாதபோதிலும், மற்றும் அவசியமானபோதும் நீ வலிய அவனிடம் சென்று உனது கிள்ளை மொழிகளாலும் வனப்பினாலும் அவனுக்குச் சந்தோஷமூட்டுவாயாக! அப்படிப்பட்டவளுக்

தே ஈசுவரன் சகலசம்பத்தையும் கொடுப்பார் இதை உன்மனத்தே இருத்திக்கொள்வாயாக!

நேரிழாய்! யாவரிடமும் அருமையாயும் அன்பாயும் பேசு. சிறுமையாய் நடவாதே! தற்பெருமையையும் பொறாமையையுங் கொள்ளாதே! பலனைக்கருதாது வேலைசெய். உண்மைக்கு வேலை செய். பிறர் மெச்சுவதற்கு ஒருபோதும் செய்யாதே!

ஆரணங்கே! உனது அன்பன் எது கூறினும் எதிர்த்துக் கூறாதே! எது? எதற்கு? என்ற கேள்விகளை கணவனிடத்தில் கேட்காதே. மணாளனிடத்தில் மாசற்ற மகிழ்ச்சியாய் நடந்து கொள்.

பைந்தொடியே! விருப்புடன் வந்தவர்களை உபசரி. செல்வச் செருக்காலும் மற்றவையாலும் அகங்காரங்கொண்டு மமதையாயிராதே! ஏழைகளிடமும், அதிதிகளிடமு மன்பாயிரு. கீழ்படித லென்னும் குணத்தில் பங்கெடு. அடிக்கடி தன்னந்தனியாய் வெளித்தெருவுக்குப் போகத் துணியாதே!

பெண்மணியே! காடமாய்ப் பேசாதே; வஞ்சகமாய் வாழாதே; சண்டைகள் மூட்டிவிடாதே. ஒருவரோடொருவர் அபிப்பிராயம் மாறி பகைமையாயிருக்கும்படி செய்துவிடாதே. உன்னிடம் நம்பிக் கூறிய வொன்றை ஒருபோதும் மற்றவர்களிடம் கூறிவிடாதே! இது விஷயத்தில் எச்சரிக்கையாயிரு.

குணசீலியே! கல்வி என்னும் கருந்தனத்தை பெறுமலிராதே! நல்லொழுக்கமே உயர்வளிக்கும் என்பதை ஞாபகத்தில் இருத்தக் கடவை. கண்கண்ட தெய்வமாமுனது காதற் கண்ணாளனையும், கடவுளையும், என்றும் மறவாதே!

அறிஞன் பெண்களைத் தங்கள் அடிமை என எண்ணான்.

மீறி எண்ணினல் அது அவனது அடிமைத் தனத்தையே அறிவிக்கும்.

ஓய்வுநேரத்தை உபயோகிக்கும் முறை.

பள்ளத்தூர் A. C. ஹைஸ்கூல் உபாத்தியாயர்
திரு. S. திருமலை அய்யங்காரவர்கள் எழுதுவது.

இந்நிலவுலகின் கண், பிறவிகளுக்கெல்லாம் மானிடப் பிறவியே உயர்ந்ததென்பது எல்லோரும் அறிந்தவிஷயம். சகல உயிர்ப்பிராணிகளுக்கும் உணவுதேடவேண்டியது அவசியம். மக்களும் உணவுதேடச் சிரமப்படவேண்டியதே. நாம் நாள் முழுவதும் உணவுதேடுவதிலேயே காலத்தைக் கழிக்கவேண்டியதில்லை. உணவு கிடைப்பதற்காக அவரவர்கள் சிரமப்பட்டு உழைத்துப் பொருள்தேடும் நேரத்தைத்தவிரவும், தூங்கும் நேரம் தவிரவும், மிஞ்சிய நேரம் எவ்வளவோ இருக்கின்றது.

அப்படி மிஞ்சியநேரத்தை ஏதேனும் ஒரு நல்லவழியில் செலவழித்தல், பெரும்பான்மையாய் நமக்கும் சில சமயங்களில் உலகத்தோருக்கும் உபயோகமானகாரியங்களைச் செய்துமுடிக்க நேரிடுகிறது. சிலசமயங்களில் நாம் செய்யும் அக்காரியங்கள் அழியாப் புகழையுந் தந்து நம்முடைய பெயரையும் என்றும் நிலைத்திருக்கும்படி செய்கின்றது.

உலகத்தில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஆச்சரியமான இயந்திர வேலைகள் முதலியன ஓய்வுநேரங்களில் கையாண்ட காரியங்களே யாகுமென்று நிரூபித்துச் சொல்லலாம். அம்மாதிரியான வேலைகள் செய்யும்போது வேலையின் தொந்தரவை நாம் உணரமுடியாதவைகளாவும், தினந்தோறும் நாம் செய்யும் வேலைகளின் சிரமத்தை மறக்கடிக்கக்கூடியவைகளாகவும், மேலும் அவ்வேலைகள் நமக்கு ஆனந்தத்தை அளிக்கவல்லவைகளாகவுமிருக்கவேண்டும். உதாரணமாக சித்திரம் எழுதுதல், பாட்டுப் பாடுதல், வர்ணம் தீட்டுதல் முதலியன. மேலும் நாம் பிழைப்பிற்காகச் செய்யும் வேலையானது நமக்கு எஜமானர்கள் திருப்தி அடையும்படி செய்யவேண்டியிருப்பதால், நாம் அதற்குத் தகுந்தபடியாக வேலையைச் செய்யவேண்டும். ஆனால், ஓய்வுநேரத்தில்

செய்யும் உற்சாகமுள்ள வேலையோ என்றால் நமக்குச் சிரமம் கொடுக்காமல் நம்மையே திருப்திசெய்து ஆனந்தம் அளிக்க வல்லது.

முன் ஒருகாலத்தில் ஜேம்ஸ்வாட் என்ற ஒரு ஐரோப்பியச் சிறுவன் தான் சும்மாவேலையற்றிருக்கும்போது அடுப்பின்மேல் ஒருபாத்திரத்தில் தண்ணீர் காய்ந்துகொண்டிருந்ததைப் பார்த்தான். அதிலிருந்து நீராவி மேலேகிளம்பிக்கொண்டிருந்தது. அவன் விளையாட்டாய் ஒரு இலேசான தட்டை எடுத்து அந்தப் பாத்திரத்தை மூடினான். நீராவி அதிகமாக வந்ததும் அந்தத் தட்டை உயரத்தூக்கிற்று. இம்மாதிரி அவன் இரண்டு மூன்று தடவை செய்தான். கடைசியில் அவன் நீராவிக்கு எதையும் அசைக்கும் அல்லது தள்ளும் சக்தி உண்டென்று தெரிந்து கொண்டு அதைப் பிறருக்கும் வெளிப்படுத்தினான். அதிலிருந்து இப்பொழுது ரெயில்வே வண்டிகள் ஓடச்செய்யப்பட்டன. ஜேம்ஸ் வாட் நேரத்தைக் கழிப்பதற்காக அடுப்பண்டைபோய் தட்டை மூடி ஒரு அரிய பெரிய விஷயத்தைக் கண்டுபிடித்தான். மின்சார சக்தியினால் இப்பொழுது ஓடும் இயந்திரவேலைகளும் ஓய்வுநேரத்தில் விளையாட்டாகச் செய்த வேலைகளின் பயனே என்பது நன்கு விளங்கும்.

பூமிக்கு இழுக்கும் சக்தி உண்டென்று கண்டுபிடித்த நீயுடன் பிரபுவும் விளையாட்டாகக் கல்முதலிய சில சாமான்களை ஆகாயத்தைநோக்கி விட்டெறிந்து ஒவ்வொன்றும் பூமிக்கு வரவே, பூமிக்கு இழுக்கும் சக்தி உண்டென்று உலகத்தோருக்கு விளக்கினார்.

ஆகையால் சிறுவர்களே, நீங்கள் உங்கள் ஓய்வுநேரத்தில் வீண்வம்பு பேசியும் தெருக்களில் அலைந்துதிரிந்து வீணே காலத்தைக் கடத்திவிடாமலும் ஏதேனும் ஒரு சிறிய வேலையைச் செய்ய ஆரம்பியுங்கள். 'இளமையிற்கல்' என்றபடி இளம்பிராயத்திலேயே துடங்கிச் செய்யவேண்டும். அம்மாதிரி நீங்கள் செய்தால் உங்களுக்கு நல்ல பேரும் உலகத்தோருக்கு நன்மையும் உண்டாகும். உங்கள் முயற்சியும் மெய்வருந்தக் கூலிதரும். முயற்சியுடையார் என்றும் இகழ்ச்சியடையார்.

சமாதான விவரங்கள்.

இருதரப்பு அறிக்கைகள்.

[காங்கிரஸ் சார்பாக மகாத்மா காந்திக்கும் வைசிராய் இர்வின் பிரபுவுக்கும் மார்ச்சுமீ ச-ந் தேதி ஓர் சமரசம் ஏற்பட்டது. அது சம்பந்தமான பூரா விவரங்களும் நிபந்தனைகளும் வெளியாகியுள. அவற்றைக் கீழே தந்திருக்கிறோம்.]

சர்க்கார் அறிக்கை.

மார்ச்சுமீ ரு-ந் தேதி ஆலோசனை சபையோடு கூடிய கவர்னர் ஜெனரல் பின் வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்:—

(க) மேன்மை தங்கிய ராஜப் பிரதிநிதிக்கும், திரு. காந்திக்கும் நடந்துள்ள சம்பாஷணைகளின் பயனாக, சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்திவிடுவதென்றும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சம்மதத்தைப்பெற்று இந்தியா அரசாங்கத்தாரும் மாகாண அரசாங்கங்களும் சிற்சில நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதென்றும், ஏற்பாடாயிருக்கிறது.

(உ) இந்திய அரசியல் அமைப்புச் சம்பந்தமாக இனிவருங் காலத்தில் நடக்கப்போகும் விவாதத்தின் போக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அங்கிகாரத்தைக்கொண்டு பின் வருமாறு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, லண்டன் ஸர்வகட்சி மகாநாட்டில் விவாதிக்கப்பட்ட இந்திய அரசியல் திட்டத்தைப்பற்றி மேலே தொடர்ந்து ஆலோசிப்பது தான் அந்த விவாதத்தின் கருத்து. லண்டன் மகா நாட்டில் நிர்ணயித்த திட்டத்தில், "அகில இந்திய ஐக்கிய அரசியல்" ஒரு முக்கிய அம்சமாக விருக்கும். அதே மாதிரி இந்தியரின் ஜவாப்தாரித்துவம், தேசப் பாதுகாப்பு, வெளி நாட்டுச் சம்பந்தம், சிறுபான்மையோர் நிலைமை முதலியவை சம்பந்தமான பந்தோபஸ்துகளும் முக்கிய அம்சங்களாகும். வரவு

செலவு விஷயத்தில் இந்தியாவின் மதிப்பைக் காப்பாற்றுவதும், கொடுக்கவேண்டிய இனங்களுக்கு வகை செய்வதும், அதே மாதிரி முக்கிய விஷயங்களாகும். இவை இந்தியாவின் நன்மையை உத்தேசித்த பந்தோபஸ்துக்களாகவிருக்கும்.

(ங) ௧௯௩௧ ஜனவரி ௧௯-ந்தேதி பிரிட்டிஷ் முதன் மந்திரி வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம், இந்த அரசியல் திட்ட விஷயமாய் இனிமேல் நடக்கப்போகும் விவாதங்களில் காங்கிரஸ் பிரதிநிதிகள் கலந்துகொள்வதற்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

(ச) சட்டமறுப்பு இயக்கத்துடன் நேராகச் சம்பந்தப்பட்ட காரியங்களை யொட்டியே இந்த உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது.

(ரு) சட்ட மறுப்புப் பயன் தரும் முறையில் நிறுத்திவிடப்படும்; அதே மாதிரி பதிலுக்கு அரசாங்கமும் நடவடிக்கையெடுத்துக்கொள்ளும். சட்டமறுப்பு இயக்கத்தை பயன் தரும்வண்ணம் நிறுத்துவதென்றால், "எந்த முறைகளைக் கையாளுவதன் மூலமாகச் சட்டமறுப்பு இயக்கம் நடத்தப்படுகிறதோ, அந்த முறைகளையெல்லாம் திறமையாக நிறுத்திவிடுவது" என்று அர்த்தம். முக்கியமாக அடியிற்கண்ட காரியங்கள் நிறுத்தப்பட்டுவிடும்:-(க) எந்தச் சட்டத்தின் விதிகளையும் கட்டுப்பாடாக மீறி நடத்தல்; (உ) நிலவரியையும் மற்றும் சட்ட பூர்வமான இதர வரிகளையும் கொடாதிருக்கத் தூண்டுவது; (ங) சட்ட மறுப்பை ஆதரித்துத் துண்டுப் பத்திரிகைகள் வெளியிடுவது; (ச) அரசாங்கத்துக்கு விரோதமாகச் சர்க்கார், ராணுவ சேவகர்களையும் கிராம உத்தியோகஸ்தர்களையும் நடக்கும்படித் தங்கள் செல்வாக்கைக் கொண்டு தூண்ட முயலுதல்; வேலையை ராஜி நாமாச்செய்யும்படி அவர்களைத் தூண்டுதல்.

(௬) அன்னிய நாட்டுத்துணி பகிஷ்கார விஷயத்தில், உ பிரச்னைகள் அடங்கியிருக்கின்றன. முதலாவது பகிஷ்காரத்தின் போக்கு; இரண்டாவது அதை அமுலுக்குக் கொண்டுவரும் பொருட்டு அனுஷ்டிக்கப்படும் முறைகள். இந்த விஷயமாக அரசாங்கத்தின் நிலைமை என்னவென்றால்:—இந்தியாவின் செல்வ

நிலைமையை அபிவிருத்தி செய்வதற்கான பொருளாதார கைத்தொழில் இயக்கத்தின் ஒரு அம்சமாக இந்தியக் கைத்தொழில் அபிவிருத்திக்குவகைசெய்வதை, அரசாங்கத்தார் ஒப்புக்கொள்ளுகிறார்கள். சட்டத்தையும் சமாதானத்தையும் பாதிக்காமலும், தனிப்பட்ட நபர்களின் சுதந்தரத்தில் தலையிடாமலும், மேற்குறித்த நோக்கத்துடன் செய்யப்படும் பிரசாரம் அல்லது விளம்பர முறைகளைக் கூடாதென்று தடுக்க அரசாங்கத்தார் இஷ்டப்படவில்லை. துணிப்பஹிஷ்காரம் ஒன்றில்மட்டும் எல்லா அன்னியத் தேசங்களும் ஒன்றாகப் பாவிக்கப்பட்டிருக்கின்றனவேயன்றி, மற்றப்படி இந்தியாவில் உற்பத்தி செய்யப்படாத பிற சாமான்கள் விஷயத்தில் நடத்திவந்திருக்கும் பகிஷ்காரப் பிரசாரமானது, முக்கியமாகப் பிரிட்டிஷ் சாமான்களுக்கு விரோதமாகவே நடத்தப்பட்டு வந்திருக்கிறது; ராஜீய நோக்கங்கள் சித்தியாகும்பொருட்டு இந்த பகிஷ்கார முறை கையாளப்பட்டிருப்பதாகவும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இத்தன்மை வாய்ந்ததாயும், இந்நோக்கத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டதாயுமுள்ள பகிஷ்காரமானது, அரசியல் பிரச்சினைகளைப்பற்றிப் பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகளும் இந்திய சமஸ்தானப் பிரதிநிதிகளும் சேர்ந்து பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடனும் இங்கிலாந்திலுள்ள ராஜீயக் கட்சிகளுடனும் வெளிப்படையாகவும் சிநேக பாவத்துடனும் விவாதிப்பதில் காங்கிரஸ் பிரதிநிதிகள் கலந்துகொள்வதற்கு அனுசரணையாக இராதென்று ஒப்புக்கொள்ளப்படுகின்றது. இந்த ராஜி அம்மாதிரியான விவாதத்தை இனி நடத்தும்நோக்கத்துடன் தான் ஏற்படுகிறது. எனவே, சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்துவதன் மூலம், பிரிட்டிஷ் சாமான் பகிஷ்காரத்தை ஒரு ராஜீயக் கருவியாக உபயோகிப்பதைத் திட்டமாக விட்டுவிடுவதாக ஏற்படுகின்றது. இதனால் ராஜீயக்கிளர்ச்சி நடந்துவந்த காலத்தில்பிரிட்டிஷ் சாமான்களை விற்பனை செய்வதையோ, அல்லது வாங்குவதையோ நிறுத்தியவர்கள், விரும்பினால் எவ்விதமான நிர்ப்பந்தமுமின்றித் தங்களது மனதை மாற்றிக்கொள்ளச் சுதந்தரமளிக்கப்படவேண்டும் என்பதும் தானாக ஏற்படுகிறது.

(எ) அன்னியச் சரக்குகளுக்குப் பதிலாக இந்தியச் சரக்குகளை உபயோகிக்கும்படிச் செய்வதிலும், மயக்கமுண்டாக்கும் லாகிரி வஸ்துக்களை உபயோகிப்பதைத் தடுப்பதிலும், சட்டத்திற்கு விரோதமான மறியல் முறைக்குட்பட்ட நடவடிக்கைகளைக் கைக்கொள்ளக்கூடாது. எவ்விடத்திலாவது எப்பொழுதாவது இந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுமாயின் அந்த விடத்தில் மறியலை நிறுத்தவேண்டும்.

(அ) போலீஸ் நடத்தையைப் பற்றிச் சில குறிப்பிட்ட சம்பவங்களை திரு. காந்தி அரசாங்கத்துக்கு அறிவித்து, அந்தச் சம்பவங்களில் பகிரங்க விசாரணை நடத்தவேண்டிய அவசியத்தை வெளியிட்டார். தற்கால நிலையில் இவ்விதமாகச் செய்வதால் அதிகக் கஷ்டங்களேற்படுமென்று அரசாங்கத்தார் எண்ணுகிறார்கள். அவ்விதம்செய்தால்ஒருவர்மேல்ஒருவர் குறைகூறிக் குற்றம்சாட்டிவிடுவார்களென்று நம்புகிறார்கள். அமைதிஏற்படுத்துவதற்கு இது இடையூறாகவே யிருக்கும். இந்தக் காரணங்களையெல்லாம் முன்னிட்டு திரு, காந்தி அந்த விஷயத்தை வற்புறுத்தாதிருக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்.

(௯) சட்டமறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்ட உடனே அரசாங்கத்தார் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கை பின்வரும் பாராக்களில் விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது:—

(௰) சட்டமறுப்பு இயக்கம் சம்பந்தமாக வெளியிட்ட எல்லா அவசரச் சட்டங்களும் வாபீஸ் வாங்கப்பட்டுவிடும். "பயங்கர இயக்கம்" (புரட்சி இயக்கம்) சம்பந்தமான ௧௯௩௧-ம் வருஷத்திய முதலாவது அவசரச் சட்டம் இந்த இனத்தில் சேராது.

(௧௧) ௧௯௰அ-ம் வருஷத்திய கிரிமினல் லாத்திருத்தச் சட்டத்தின்படி 'சட்ட மறுப்பு' இயக்கத்தையொட்டி என்னென்ன சபைகள் சட்ட விரோதமென்று விளம்பரப்படுத்தப்பட்டனவோ அச்சங்கங்கள் சம்பந்தமான விளம்பரங்கள் வாபீஸ் வாங்கப்படும். பர்மா அரசாங்கத்தார் சமீபத்தில் அச்சட்டத்தின்படி பிறப்பித்த விளம்பரம் இந்த இனத்தில் சேரவில்லை.

(௧௨) (௧) சட்ட மறுப்பு இயக்கம் சம்பந்தமாகத் தொடர்ந்து, பைசலாகாமலிருக்கும் சட்ட நடவடிக்கைகள் நிறுத்திக்கொள்ளப்படும். ஆனால் பலாத்காரமான குற்றங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் இவ்வாறு செய்யப்படமாட்டாது. பெயரளவுக்கு மட்டும் பலாத்காரமாகவோ, பலாத்காரத்திற்குத் தூண்டத்தக்கதாகவோ காணப்படும் குற்றங்களைச் செய்தவர்கள் விஷயத்திலும், வழக்குகள் வாபீஸ் வாங்கிக்கொள்ளப்படும். (உ) கிரிமினல் புரோஸிஜர் கோடுப்படி எடுத்துக்கொள்ளப்பட்ட ஜாமீன் நடவடிக்கை விஷயத்திலும் இவ்விதக் கொள்கையே அநுஷ்டிக்கப்படும். (௩) சட்ட மறுப்பு இயக்க சம்பந்தமாக எந்த மாகாண அரசாங்கமாவது ஹைகோர்ட்டில் வக்கீல் தொழில் சட்டப்படி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருந்தாலும் சரி, ஹைகோர்ட்டை நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படிச் சொல்லியிருந்தாலும் சரி, அதில் சம்பந்தப்பட்டவர் பலாத்காரத்தில் சேர்ந்ததாகவோ அன்றி பலாத்

காரத்திலிறங்கத் தூண்டியதாகவோ பிரஸ்தாபமில்லாவிட்டால் அவர்மீது ஏற்பட்ட நடவடிக்கையைவாபீஸ்வாங்கிக்கொள்ளச் சம்மந்தப்பட்ட கோர்ட்டில் அது மனுச்செய்துகொள்ளும். (ச) ஸோல்ஜர்கள் விஷயத்திலோ போலீஸ் விஷயத்திலோ உத்தரவை மீறியதற்காக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தால் இந்த ஏற்பாட்டில் அவ்வழக்குச் சேராது.

(கங) (க) பெயரளவில் மட்டும் பலாத்காரம் அல்லது அவ்வித பலாத்காரத்திலிறங்கத் தூண்டுதல் ஆகியவை தவிர, மற்றப்படி பலாத்காரக் குற்றம் செய்யாமல் சட்டமறுப்பு இயக்கத்துக்காகத் தண்டனை அனுபவித்து வருபவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள். (உ) இவ்வித நிலையிலுள்ள கைதி சிறைச்சாலையில்மேற்கொண்டதுபோன்ற பலாத்காரமான குற்றத்துக்காக அதிகப்படியாகத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தால் அந்த அதிகப்படித் தண்டனையும் ரத்துசெய்யப்படும். அல்லது இதற்காக எந்த ராஜீயச் சிறையாளர் மீதாவது வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தால் அதுவும் வாபீஸ் வாங்கிக்கொள்ளப்படும். சோல்ஜர்களும் போலீசாரும் உத்திரவுக்கு மீறி நடந்ததாகக்குற்றம் சாட்டப்பட்டுத்தண்டிக்கப்பட்டிருந்தால் அவர்கள் விஷயத்தில் இதில் பொருந்தாது.

(கச) வசூலிக்கப்படாத அபராதத் தொகை வஜாச் செய்யப்படும். கி. பு. கோ. ஜாமீன் சட்டப்படி ஜாமீன் எங்காவது பறிமுதல் செய்யப்பட உத்தரவிடப்பட்டிருந்து இன்னும் அது பறிமுதல் செய்யப்படாதிருந்தால் அவ்விதமே அதுவும் வஜாச் செய்யப்படும். எந்தச் சட்டப்படியாகிலும் வசூலிக்கப்பட்டுவிட்ட அபராதத்தொகையும் பறிமுதல் செய்துவிடப்பட்ட ஜாமீன் தொகையும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டா.

(கரு) சட்ட மறுப்பியக்கத்தை முன்னிட்டு ஒரு பிரதேச ஜனங்களின் செலவில் அங்கு வைக்கப்பட்டுள்ள அதிகப்படியான போலீஸ் படையை எடுத்துவிடலாமென்று மாகாண அரசாங்கத்தார் நினைத்தால், அப்படியே செய்வார்கள். அதிகப்படிப் போலீஸ் படையின் செலவுக்குக்கண்டு மிச்சப்படும்படி வசூல் செய்யப்பட்டிருந்தாலொழியப் பணத்தை அரசாங்கத்தார் வாபீஸ் கொடுக்கமாட்டார்கள்.

(கசு) (ஏ) ஜங்கம சொத்து, சட்ட பூர்வமாக ஒருவருடைய அனுபவத்தில் இருந்திருந்து சட்ட மறுப்பியக்கத்தை முன்னிட்டு அவசரச் சட்டங்களின்படியோ அல்லது வேறு சட்டத்தின்படியோ பறிமுதல் செய்யப்பட்டு அரசாங்கத்தினிடமிருப்பின் அது திருப்பிக்கொடுக்கப்படும்; (பி) நிலவரி அல்லது வேறு வரியை வசூல் செய்வதற்காக ஜப்தி செய்யப்பட்ட ஜங்கம சொத்து,

திருப்பிக்கொடுக்கப்படும்;(பி) ஆனால் வரியைக்கொடுக்கவேண்டியவர் கிரமமான காலத்திற்குள் வரியைக் கட்டமாட்டார் என்று ஜில்லாக் கலெக்டர் நினைப்பாரானால் சொத்துத் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது; கிரமமான காலமென்பது என்ன என்று நிர்ணயிக்கையில் வரியைக் கட்டவேண்டியவர் அதற்காக அவகாசத்தைப் பெற விரும்பக்கூடியது கவனிக்கப்படும்; அவசியமிருந்தால், நிலவரி வசூல் நிர்வாக விதிகளை அனுசரித்து நிறுத்திவைக்கப்படும்; (ஸி) சொத்துச் சேதமடைந்து விட்டதற்குப் பரிகாரம் செய்யப்படமாட்டாது; (டி) ஜங்கம சொத்து விற்கப்பட்டுவிட்டால் அல்லது வேறுவிதமாகப் பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டால், பரிகாரம் செய்யப்படமாட்டாது; கிரயத்தொகை வசூலாகவேண்டிய வரியைக் காட்டிலும் அதிகமாகவிருந்தாலொழிய அது திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது; ஜப்தி, சட்டப்படி செய்யப்படவில்லை என்ற காரணத்தை முன்னிட்டு எவரும் சட்டப்படிக் குற்றப்பரிகாரத்தைத் தேட உரிமையுடையவராக இருப்பார்.

(கஎ) (ஏ) சுகூகூ௦-ம் வருஷத்திய கூ-வது அவசரச்சட்டத்தின் கீழ்ஸ்தாவரசொத்துவசப்படுத்தப்பட்டிருப்பின், அந்தஅவசர சட்டத்தின் ஷரத்துகளை அனுசரித்து அது திருப்பிக்கொடுக்கப்படும்; (பி) நிலம் முதலிய ஸ்தாவர சொத்துக்கள் நில வரிக்காகவோ, வேறு வசூலாக வேண்டிய தொகைகளுக்காகவோ ஜப்தி செய்யப்பட்டிருப்பின் திருப்பிக் கொடுக்கப்படும்; ஆனால் கிரமமான காலத்தில் வரியைக் கொடுக்க வரி கொடுக்கவேண்டியவர் மறுப்பார் என்று ஜில்லாக் கலெக்டர் நினைப்பாரானால், சொத்துத் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது; கிரமமான காலம் என்னவென்று நிர்ணயிக்கையில் வரி கொடுக்க வேண்டியவர் வரியைக் கட்ட உண்மையில் காலம் வேண்டியவராக இருப்பின் அது கவனிக்கப்படும்; அவசியமிருந்தால் வரி வசூல் சட்டத்தின்படி வசூல் நிறுத்திவைக்கப்படும்; (ஸி) மூன்றாவது மனிதருக்கு நிலம் விற்கப்பட்டுவிட்டதானால் அரசாங்கத்தார் சம்மந்தப்பட்ட வரையில் அது முடிவான காரியமாகும்; [குறிப்பு:—திரு. காந்திக்குத் தெரிந்துள்ள தகவல்களின்படி இந்த விற்பனைகளில் சிலவாவது சட்டத்தை மீறியவை யென்றும் அநியாயமானவையென்றும் அவர் அறிவித்தார். அரசாங்கத்தாருக்குக் கிடைத்துள்ள தகவல்களை முன்னிட்டு அதை அவர்கள் ஒப்புக்கொள்ள முடியாது.] (டி) சொத்தை ஜப்திசெய்தது சட்டப்படி செல்லாது என்று சட்டப்படி பரிகாரம் தேட எவருக்கும் உரிமையுண்டு.

(கஅ) சட்ட சம்மதமில்லாத வழியில் வசூல் செய்யப்பட்டிருக்குமினங்கள் மிகவும் குறைவாகவே இருக்கும் என்று அர

சாங்கத்தார் நம்புகிறார்கள். அத்தகைய கேசுகளில் சட்ட விரோதமான நடவடிக்கை உருசுப்பிக்கப்படும் பட்சத்தில் காலதாமதமன்னியில் விசாரணை செய்து பரிகாரம் செய்துகொடுக்கும்படி மாகாண அரசாங்கங்கள் ஜில்லா அதிகாரிகளுக்கு உத்தரவு அனுப்பும்,

(கக) ராஜினாமா மூலமாகக் காலியான ஸ்தானங்கள் காயமாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில் மாஜி உத்தியோகஸ்தர்களை மீண்டும் எடுத்துக்கொள்ள அரசாங்கத்தால் சாத்தியப்படாது. இதர ராஜி நாமாக்கள் ஒவ்வொன்றும் அதனதன் யோக்கியதா யோக்கியதையை அனுசரித்து மாகாண அரசாங்கங்களால் கவனிக்கப்படும். மறுபடியும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மனுச்செய்துகொள்ளும் அரசாங்கஉத்தியோகஸ்தர்கள், கிராம உத்தியோகஸ்தர்கள், ஆகியவர்கள் விஷயத்தில் மாகாண அரசாங்கங்கள் தாராளப் போக்கைக் கையாளுவார்கள்.

(உ0) உப்பள நிர்வாக விஷயமாக இப்பொழுது இருந்துவரும் சட்டங்களை மீறுவதை அரசாங்கத்தார் சகித்துக்கொண்டிருக்க முடியாது; இப்பொழுது செல்வ நிலைமை இருந்துவரும் நிலைமையில் உப்புச் சட்டங்களில் விசேஷ மாறுதல்களையும் அவர்கள் செய்யமுடியாது. இருந்தாலும் ஏழைகளில் ஒரு சார்பாருக்கு அனுகூலமாக உள்ளூருக்குள் உபயோகித்து கொள்ளவோ அல்லது விற்பனை செய்யவோ,உப்புச் சேகரிக்கக்கூடியதாகவோ அல்லது உற்பத்தி செய்யக்கூடியதாகவோ இருக்குமிடங்களில், அவ்விடங்களிலுள்ளவர்கள் அதைத் தயாரித்துக்கொள்ளவோ அல்லது சேகரித்துக்கொள்ளவோ சில இடங்களில் அனுஷ்டானத்திலிருந்து வரும் ஏற்பாட்டை ஒட்டி, நிர்வாக தோரணையில் ஏற்பாடுகள் செய்ய அரசாங்கத்தார் தயாராக இருக்கிறார்கள். ஆனால் வெளி இடங்களிலுள்ளவர்களுக்கு அந்த உப்பை விற்பனை செய்யக்கூடாது.

(உக) இந்த ஒப்பந்தத்தின்படி ஏற்படும் பொறுப்புக்களைப் பூர்ணமாக நிறைவேற்றி வைக்கக் காங்கிரஸ் தவறும் பட்சத்தில் பொது ஜனங்களையும் தனிப்பட்டவர்களையும் பாதுகாக்கவும், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தவும் அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கத்தார் எடுத்துக்கொள்வார்கள்.

(ஒப்பம்) எச். டப்ளியூ. எமர்ஸன்,
உள்நாட்டு இலாக்காக் காரியதரிசி.

காங்கிரஸ் கமிட்டித் தீர்மானம்.

அகில இந்தியக் காங்கிரஸ் காரியக் கமிட்டி புதிய டில்லியில் மார்ச்சுமீ ௫வ கூடிக் கீழ்க்கண்ட தீர்மானத்தை செய்தது:-

"இந்திய அரசாங்கத்திற்கும் காங்கிரஸ் சார்பாக மகாத்மா காந்திக்கும் ஏற்பட்டுள்ள தற்காலிக ஒப்பந்தத்தைக் காரியக் கமிட்டி பரிசீலனை செய்து அங்கீகரிக்கிறது. அந்த ஒப்பந்த நிபந்தனைகளின்படி நடக்கமற்ற காங்கிரசுக் கமிட்டிகளுக்கு உத்தரவிடுகிறது.

நாட்டினர் காங்கிரஸ் நடவடிக்கைகள் சம்பந்தமாக இந்த நிபந்தனைகளை நிறைவேற்றி வைப்பார்களென்றும் காங்கிரசு சார்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளைப் பூர்ணமாக நிறைவேற்றி வைப்பதைப் பொறுத்தே பூரண சுயராஜ்யம் இந்தியாவுக்குக் கிடைக்கக் கூடிய அபிவிருத்தி ஏற்படுமென்றும் கமிட்டி கருதுகிறது."

காரியதரிசி அறிக்கை.

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் பொதுக் காரியதரிசி டாக்டர் சையுது முகமது பின்கண்ட தந்தியை மார்ச்சுமீ ௫வ மாகாண காங்கிரஸ் கமிட்டிகள் பலவற்றிற்கும் சொன்னார்:—

"காங்கிரஸ் சார்பாக காரியக்கமிட்டிக்கும் இந்திய அரசாங்கத்திற்கும் ஏற்பட்ட தற்காலிகமான உடன்பாட்டைஉத்தேசித்து அதன்படி நடக்க வேண்டுமெனத் தங்கள் மாகாணத்திலுள்ள எல்லா காங்கிரஸ் கமிட்டிகளுக்கும் அறிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன். சட்டமறப்பு இயக்கத்தையும் வரிகொடா இயக்கத்தையும் விட்டுவிடவேண்டும். இனிச் சட்டங்களை மீறி நடக்கக் கூடாது.

"பிரிட்டிஷ் சரக்கு பகிஷ்காரத்தைவிட்டு விடவேண்டும். அது சம்பந்தமாக அவர் அவர்களுக்கும் பூரண சுதந்தரம் கொடுக்கப்படவேண்டும். ஆனல் மயக்கம் தரக்கூடிய வஸ்துக்கள் விற்கும் கடைகளையும் சாராயக் கடைகளையும் அந்நியநாட்டு ஜவுளிக்கடைகளையும் எங்கெங்கு அவசியம் நேருகிறதோ அங்கெல்லாம் பகிஷ்கரிக்க அனுமதி கொடுக்கவேண்டும். இது சம்பந்தமாகச் செய்யப்படும் மறியல் பலவந்தமுடையதாக இருக்கக்கூடாது. வற்புறுத்துதலும் அதிலிருக்கக் கூடாது. விரோதமான ஆர்ப்பாட்டங்கள் பொது ஜனங்களுக்குத் தடை ஏற்படக்கூடிய ஆர்ப்பாட்டங்கள் சாதாரணச் சட்டத்துக்குட்பட்ட எவ்விதக் குற்றங்கள் ஆகியவற்றைச் செய்யக்கூடாது. மேற்கண்ட வாறு நடந்து கொள்ளாவிட்டால் அங்கு மறியல் நிறுத்திவைக்கவேண்டும்.

அந்நிய நாட்டுச் சரக்குகளுக்குப் பதிலாக சுதேசிச் சரக்குகள் வாங்கும்படி வலியுறுத்துவது முன்போல் தானிருக்கும். கட்டுப்பாடாக உப்புச் சட்டத்தை மீற முயற்சிசெய்யக்கூடாது. உப்பளங்களை முற்று கையிட.வும் கூடாது. ஆனல் உப்புச்சேகரிக்கப்படும் இடங்களில் உள்ள கிராம வாசிகளும் உப்பு உற்பத்தி செய்யப்படும் இடங்களில் உள்ள கிராம வாசிகளும் அவர்கள் வீட்டு உபயோகத்துக்கோ அல்லது அக்கம் பக்கத்தில் விற்பனை செய்வதற்கோ உப்புச் சேகரிக்கலாம். உப்பு உற்பத்தி செய்யலாம். ஆனல் வெளியில் கொண்டுபோய் அதை விற்கக்கூடாது. அதிகாரம் பெருமல் சமாச்சாரத் துண்டுப்பிரசுரங்களை வெளியிடுவதை நிறுத்திவிடவேண்டும்.

"வரி செலுத்துவோர் நிலவரியைச் செலுத்த ஏற்பாடுசெய்ய வேண்டும். பொருளாதாரக் கஷ்டத்தை உத்தேசித்தோ வரி செலுத்த முடியாமலோ கிராமத்தை விட்டுப்போய் விட்டிருக்கும் கிராமவாசிகள் கிராமங்களுக்குத் திரும்பவும் வரவேண்டும். வரி வஜாவுக்கு வேறு முறைகளை அநுஷ்டிக்கவேண்டும்.

"ராஜீயக்கைதிகள் விடுதலையாக விருப்பதால் கராச்சி காங்கிரஸுக்குப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் விஷயமாக தனியான உத்தரவு சீக்கிரத்தில் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும்."

நன்மணித்திரள்.

தெய்வபலமே பலம். தெய்வாநுக்கிரகமே அநுக்கிரகம். தெய்வபக்தியே பக்தி. தெய்வ ரட்சணமே ரட்சணம்.

(பிரகலாதன்)

வெளிவேஷம் டம்பம், மேற்பூச்சு, படாடோபம் முதலான டாம்பீகச் செயல்களினல் பகவானது அநுக்கிரகத்தைப் பெறமுடியாது; தெய்வ கிருபையைப் பெறுவதற்குக் களங்கமற்ற அன்பொன்றே முக்கிய சாதனம். (துருவன்)

பசியெடுத்தவருக்கு அன்னம் ருசிப்பதுபோல் பக்தியிருப்பவர்களுக்குப் பகவான் நாமம் ருசிக்கும். (நாரதர்)

எதனல் இந்த அகிலமனைத்தும் நிரம்பப்பெற்றுள்ளதோ, அதனை (அவ்வாத்மாவை) நாசமற்றதென்பதாக நீ அறிந்து கொள். அழிவற்றதான அதற்கு நாசம் ஏற்படுத்த முடியாது.

(தாயுமானவர்)

கம்பராமாயணக் கதிர்மணிக்கோவை.

நாரணன் நவில்வது.

(20-ம் பக்கத்தொடர்ச்சி.)

தசரத மைந்தன் பட்டாபிஷேகத்தின் சம்பவத்தைக் கூறவந்த கூனியை ஆரம்பத்தில் கைகேயி அழகில்லாதவளென்றும், நாகரீக மில்லாத முரட்டுக் கிழவியென்றும், அறிவிலி பேதை என்றும் வைது "இராமனைப் பயந்தவெற்கு இடருண்டோ" (மந்தரை சூழ்ச்சிப்படலம் 50) என்று கூறியவள் கல்லினும் வலிய கடினமனம் படைத்து "பூவுதிர்ந்ததோர் கொம்பெனப் புவிமிசை புரண்டாளாகி" (மந்தரை சூ படலம் 87) அரசர் பெருமானாகிய தசரதரின் வேண்டுகோளை ஏற்கவும், இணங்கவும்உடன்படாது உறுதிகொண்டாளென்னில் மனங்கரைக்கும் வல்லமையிற் தேர்ச்சிபெற்ற மந்தரையின் ஸ்திரீ சாகஸம் எத்துணை சமர்த்துடையதாகக் காண்கின்றது.

இத்தகைய விநைய பாகங்களைக் கம்பர் நுனித்தறிந்து அழகான மொழிகளில் மிகு நயமாகக் கூறும் அதிசயமே அதிசயம்! இதில் கம்பருடைய கவிக்கலை வெகு நன்றாகவே யிருக்கிறது.

ஓசையும் புத்தியும் ஒன்றுபட்டு லயிக்கச்செய்வதில் கம்பரின் அரிய செய்யுட்கள் வெகு நுட்பமுடையன. அத்துடன் இன்னோசையும் மிகுக்கும் பெருமிதமும் வாய்ந்து வெகு அழகுடன் விளங்குகின்றது. அவற்றின் அருமை பெருமைகளைச் சிறிது இங்கு விளக்குகின்றோம்.

"தோகைய ரின்னன சொல்லிட நல்லோர்
ஓகை விளம்பிட உம்பர் உவப்ப
மாக மடங்கலும் மால்விடை யும்பொன்
நாகமும் நாகமும் நாண நடந்தான்"

(பாலகாண்டம் கார்முகப்படலம் செய்யுள்32)

சிவதனுசை வளைப்பதற்காக ஸ்ரீராமன் எழுந்துசென்ற நடையழகை வருணிக்கின்ற இந்தச்செய்யுள், அப்பெருமான் அழகாயும் கம்பீரமாயும் நடந்த நடை எத்தகையதென்பது நம்மனத்திற்கு வருமாறு அந்நடை போலவே இனிய சந்தத்தோடு முடுகி நடக்குமாறு காண்க.

இக்கவியின் நடைப்போக்கைக் கொண்டே இராமனது மனதின்கண் சீதைபாலிருக்கும் வேட்கையால் வில்லை வளைக்க அவசரப்பட்டு ஓடியதைக் காணலாம். கலிவிருத்தமும், ஒவ்வோரடியிலும் ஈற்றடிச் சீர்மாச்சீராம் மற்றய கூவிளமாயிருப்பதும் நாவிற்குத் தட்டுதலில்லாமல் ஆற்றொழுக்காய் வல்லினச் சக்தியின்றி அமைதலும் ஈற்றடி வில்லை அணுக அணுக வேகம் மிகுதலையும் குறிக்க ஓரே ஒழுங்காய் வழுக்கிப் போதலையுங் காண்க.

"மாகந்தழு மகரந்தழு மளகந்தரு மதியின்
பாகந்தரு நுதலாளொடு பவளந்தரு மிதழான்
மேகந்தனி வருகின்றது மின்னேடென் மிளிர்பூண்
நாகந்தனி வருகின்றது பிடியோடென நடவா"

(அயோத்தியா காண்டம் கங்கைப் படலம், 4.)

இளம்பிறையொத்த நுதலையுடைய சீதையொடு ஸ்ரீராமன், மேகம் வில்லேந்தித் தனியாக வருவதுபோலவும், பூணையணிந்த ஆண்களிறு தன் பிடியுடனே நடந்துவருவது போலவும் வந்தான் என மொழியும் பாடல், அந்நடையழகை அங்ஙனமே விளக்கிக் காட்டுகின்றதன்றோ!

ஒருவர்க்கு மேலுள்ளார் ஒன்று கூடி நடக்கும் பான்மை, சந்தத்தால் பெறப்படுகின்றது. ஒருவரது வேகம் மற்றவர்க்கு இல்லாக்காரணத்தால் இருவரும் ஒரு பொதுநடை நேர்தலை இச்சந்தங் குறிக்கின்றது போலும்.

"அஞ்சன வண்ணனென் னுருயிர் நாயகனாளாமே
வஞ்சனை யாலர செய்திய மன்னரும் வந்தாரே
செஞ்சர மென்ப தீயுமிழ் கின்றன செல்லாவோ
உய்ஞ்சிவர் போய்விடி னுய்க்குக னென்றெனை யோதாரோ"

(அயோத்யா காண்டம் குகப்படலம் 14.)

(தொடரும்.)

கனகவல்லி

அல்லது

கள்வர் கவர்ந்த கன்னிகை.

கோவை. திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள்.

(33-ம் பக்கத் தொடர்ச்சி)

எட்டாம் அத்தியாயம்.

வழிநடையும்—வேண்டுகோளும்.

நமது பாட்டைசாரிகள் மறுநாள் விடிய நான்கு நாழிகைக்கெழுந்து மேலும் தமது பிரயாணத்தைத் தொடங்கினார்கள். நெடுவழிகழிவதற்காகக் கள்வர் தலைவன் ஜகன்னாததாஸ், ராமராஜாவை அடுத்து ஐயா! நேற்றிரவு கூறிய கதைபோலவே இன்றும் சுவைமிக்க கதைசொல்ல தயவுசெய்ய வேண்டுமென்றான். ராஜா நேற்றுதயத்தில் இருந்தது போலில்லாமல் இன்று குறைந்த சிந்தனையுடன் காணப்பட்டார். அவருள்ளம், காகதீய சாம்ராஜ்யத்தின் முன்னைய அருமை பெருமைகளும், அதி உன்னதச் சிறப்புகளும் தமது காலத்தில் முற்றும் வேறுபாடடைந்து தீனதிசையிலிருப்பதற்கு வருந்திக்கொண்டிருந்தது. கள்வர் தலைவன் தெய்வபக்தி, தேசாபிமானம் முதலியவைகளை இன்னதென ஜன்மத்திலும் அறியாதவன் எனினும் விசித்திரக் கதைகள், பழவரசர் வரலாறுகளைக் கேட்பதில் மிக்க விருப்பமுள்ளவனாகயிருந்தான். கதைகளைச் சிரவணிப்பதென்றால் காதைக்கூட அறுத்துக் கொள்ளுவன். கதைகூறுவோர் இருப்பார்களேயானால், அன்னம் தண்ணீர் வேண்டுமென்ற அக்கரையேயில்லாமல் ஆவலாய்க் கேட்டுக்கொண்டிருப்பான். மேலும் அவன் அவரிடத்தில் மிக்க விநயமாய்—“இராஜா! நேற்றிரவு தாங்கள் ஓரங்கல்வேந்தர்களின்

வீரம், பெருமை முதலியவைகளை விஸ்தாரமாய் விளங்கச்சொன்னீர்கள். அதுபோதும். இனி நல்ல ருசியுள்ள கதைகளைக் கூறிநாங்கள் சந்தோஷத்தை அடையுமாறு செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொண்டதுடன், அறிவும், கல்வியும் நிரம்பிய தங்கள் போன்றவர்கள் கதைசொல்லத்தொடங்கினால் அதுமிக்க சுவையுள்ளதாயிருக்கும். இதுவரை நான் பலமுறை 'காசிமஜிலிக்கதை' 'வேதாளக் கதை' முதலிய ருசிபொருந்திய கதைகளைக் கேட்டிருக்கிறேன். அவற்றில் எனக்கு விருப்பமில்லை. கற்பனமிகுந்த கற்பனைக் கதைகளைக் கேட்டுக் களைத்துவிட்டேன். இனி உண்மையாகவே நிகழ்ந்த மெய்க்கதைகளைக் கேட்க விரும்புகின்றேன். என்போன்றவர்கள் விருப்பம் தணிய வேண்டுமானால் தங்கள் போன்ற நல்லறிஞர்களின் பேரன்பும் வேண்டுமென்றுங் கூறினான்.

அவனது வேண்டுகோளைக் கேட்ட ராஜா, கல்வியும், நாகரீகமு மில்லாதவருக்குக்கூட உண்மைக் கதைகளைக் கேட்பதில் மிக்க விருப்பமிருப்பதற்கு அதிசயித்து புன்னகைதவழ்ந்த முகத்துடன் அவனை நோக்கி தாஸரே! உமக்குக் கதைகேட்பதில் இத்துணை விருப்பமும், உற்சாகமும் இருப்பதற்கு அகமகிழ்கின்றேன். உமது விருப்பத்தின்படியே நான் நன்கறிந்ததும், பெரியார் வாய்க் கேட்டதுமான அரிய இனிய மெய்க்கதைகளைக் கூறுகின்றேன். ஆனால், அக்கதைகளை என்னால் இப்பொழுது கூறமுடியாது. மாலையில் நாம் அனைவரும் அடுத்துவரும் கிராமத்தைச் சேர்ந்து போசன முதலிய காரியங்களை முடித்துச் சிறிது இளைப்பாரியபின்னர், நான் கதையைத் தொடங்குகின்றேன். பிரயாணஞ் செய்துகொண்டிருக்கும்போது கதை கூறுவது இன்பமாயிராது. வேறு சிந்தனையின்றி மனது நிம்மதியாயிருக்கும்போது கதா சிரவணத்தாலுண்டாகும் ஆனந்தம் அகண்டமாயிருக்கும் என்று மொழிந்தனர்.

அவரது நன்மொழிகேட்டு உள்ளமுவந்த கள்வர் தலைவன் ராஜாவிடம் மீண்டும் ஐயா! தாங்கள் இவ்விரண்டு தினங்களாகத் தொடர்ந்தாப்போல் செய்துவரும் வழிப்பிரயாணத்தால் மிகவும் களைத்துப்போயிருக்கிறீர்கள்; உணவுண்டதும் தங்களுக்கு

நித்திரைவந்தால் என் செய்வது? என்று அச்சமாயிருக்கிற தென்ருன்.

இராமராஜா உனக்கேன் அவ்வச்சம்? எனக்கு நித்திரை வராது. காகதீய ராஜாக்களின் விருத்தாந்தங்கள் நித்திராதேவி நெருங்கி வாராதிருப்பதற்கேற்ற மகாமந்திரங்களாம். நீர்மட்டும் நித்திராதேவி வசப்படாதிருக்கப் பார்த்துக்கொள்ளும் என்ருர். விரும்பத்தகாததும், சாரமற்றதுமான கதா சிரவணத்திற்கே தூங்காதநான், சுவையுடையதும், செவிக்கினிமை தருவதும், அதிசயமுடையதும், ஆனந்திக்கத் தக்கதுமான காகதீயர்களின் உண்மைக் கதைகளை, அதிலும் தங்கள் வாய்மூலம் கேட்கவிருக் கும்போது தூக்கம் வருமா? நான் ஜாக்கிரதையாகவே யிருக்கி றேன் என்று ஜகன்னுததாஸ் கூறினன். பின்னர் யாவரும் தங்கள் தங்கள் வாகனங்களை வேகமாய்த் தூண்டினர்கள். குதிரை வீரர்களும் தனது எஜமானரும் விரைந்த கதியில் வேகமாய்ச் செல்வது போலவே, வேலனும் பாரமாயுள்ள பெட்டி படுக்கை களைத் தலையில் சுமந்துகொண்டே அவர்களை விடாமல் தொடர்ந்து பின் சென்ருன். வேலனது விரைந்த நடையைக் கவனித்த ஜகனுததாஸ் முதலான பன்னிருவர்களும் அவனது கால்களை எலும்புகளல்ல; இரும்புத்தூண்கள் போலும் என்று அதிச யித்துக் கூறினர்கள்.

அவ்வாறு அவர்கள் சிறிதுதூரஞ் சென்றதும் மாலைக் காலம் சமீபித்தது. உதயமுதல் அதுவரையும் பிரயாணஞ்செய்துவந்த பிரயாணிகளின் சிவந்த முகம்போல மாலைக்காலச் சூரியன் முகங் கூடச் சிவந்திருந்தது. ஆதவனும் தான் இளைப்பாரக்கூடிய அஸ்த கிரியை விரைவிற் சென்றடைய மேற்கு நோக்கி வேகமாய்ச் சென்றுகொண்டிருந்தான். குறைந்தகால அளவிற்குள் அருண னும் சிறிது சிறிதாக மறைந்தான். கங்குல் என்னும் நங்கை தனது இருட்படலத்தை விரிக்குமுன்னே பாட்டசாரிகளும் ஓர் கிராமஞ் சேர்ந்தார்கள். அக்கிராமத்தில் வழிப்போக்கர்கள் தங்கு வதற்குச் சத்திரமில்லாததனுல் அவ்வூரில் பிரபல தனிகனும், கல்வி, அன்பு. சீலம், தயை, பரோபகாரம் முதலியனவகளில் மிக்

கானுமான ஓர் பிரபுவின் வீட்டிற்கு யாவருஞ் சென்றனர். செல் விருந்தோம்பி வருவிருந்துக்கு வழிபார்த்திருக்கும், அச்சீமான் அவர்களை இன்சொல் மொழிந்து அன்புடன் வரவேற்று இருக்கை நல்கி உண்டி முதலியவற்றால் நன்கு உபசரித்தனன். அனைவரும் உணவருந்திப் பின்னர், ஜகன்னாததாஸ் இராமராஜாவை அணுகி விநயமாக நின்று கதை கூறுமாறு வேண்டினன். வேண்டுதலின் விஷயமுணர்ந்த வீட்டதிகாரியும், பிறரும் அவரைச் சூழ்ந்து வீற்றனர். செல்வத்திலும், அதிகாரத்திலும் மிக்குயர்ந்த கல்திண்டி நரசிம்மராஜாவின் அருமைப் புதல்வர் ராமராஜா வென்பவர் அவ்வதிதிகளில் ஒருவர் என்பது அவர்களுள் சிலர் அப்பொழுது தான் அறிந்து அகமிகமகிழ்ந்து அவருடன் அளவளாவினர். அக்கம் பக்கத்தார் சிலரும் அவரைக் கண்டு கதை கேட்க உட்கார்ந்தனர். இவர்களது மத்தியில் இராமராஜா அக்கிரகண்ணியராக விருந்து கதைகூறத் தொடங்கினர்.

(தொடரும்.)

'இந்திய மித்திரன்.'

விளம்பரஞ் செய்வோர்க் கொரு
விசேஷச் செய்தி.

இந்தியர்களின் குடியேற்ற நாடாகிய மலாயாவில் "இந்திய மித்திரன்" என்னும் பெயருடன் பிரதி புதன்கிழமை தோறும் இரண்டாயிரத்தி ஐநூற்றி லதிகம் பிரதிகளாக வெளியாவதும், முழு மலாயாவின் எல்லாப் பாகங்களில் மட்டு மன்றி, இந்தியா, பர்மா, சிலோன், சயாம், ஜாவா, சுமத்ரா முதலிய வெளிநாடுகளிலும் விசேஷமாகப் பரவியுள்ளதும் மலாயாவிலிதற் கிணையில்லை யெனக் கொண்டாடும் கீர்த்திவாய்ந்தது மாகிய சிறந்த தமிழ்ப் பத்திரிகையில் விளம்பரஞ் செய்வோரே தமது வியாபார விருத்தியை உண்மையிற் கோருவோர்களும், உத்தேச பலனைப் பூரணமாயடையத் தக்கோருமாவார்கள். சந்தாதார்களாகச் சேருவோர்க்கும் சிந்தைகளிக்கத்தக்க செய்திகளனந்த முண்டு. வெளியூர் வருடசந்தா ரூபாய் 7—8—0 விளம்பர விகிதங்களுக்குக் கீழ்க்காணும் விலாசத்திற் கெழுதவும்.

மானேஜர்.
"இந்திய மித்திரன்."
ஈப்போ. (எப். எம். எஸ்.)

அபிப்பிராயங்கள்.

'சிவநேசன்' பலவான்குடி.

'நவமணி.'

பள்ளத்தூரிலிருந்து வெளிவரும் இப்பெயரையுடைய திங்கள் வெளியீட்டின் இரண்டாவது மாலையின் முதன்மணி வரப்பெற்றோம். சிறந்த பல பண்டிதர்களின் அரியபெரிய விஷயங்களடங்கிய கட்டுரைகள் பலவற்றைத் தாங்கி வந்திருக்கிறது. முன்னைய வருஷத்தினும் பன்மடங்கு தன் கொள்கையின் முன்னின்றுழைத்து, நாட்டுக்கு நலம்புரியத் திருவருளை வழுத்துகின்றேம். இதன் ஆசிரியரது இடையறு உழைப்பும் ஊக்கமும் குறிப்பிடத்தக்கன.

'நாடார்குல மித்திரன்' அருப்புக்கோட்டை.

'நவமணி.'

பள்ளத்தூர், திரு. சி. ராம. இராமனுதன் அவர்கள் ஆசிரியராயிருந்து வெளியிடும் "நவமணி" எனும் மாதப்பத்திரிகையொன்று எமது பார்வைக்கு வந்தது. இப்பத்திரிகைக்கு சென்ற தைமீ முதல் இரண்டாவதாண்டு புகுந்திருக்கிறது. இதன் ஆசிரியர் முன்னர் "அருணகிரி" எனும் பத்திரிகையின் ஆசிரியராவர் என்பதையும் ஞாபகப்படுத்திக்கொள்ளுகிறோம். "நவமணி" பெண்கள் முன்னேற்றம், ஏழைகள் கஷ்ட நிவாரணம், தீண்டாதார் முன்னேற்றம், தமிழ்க்கலை வளர்ப்பு, முதலிய பல நற்காரியங்கள் குறித்து உழைப்பதைக் குறிக்கோளாய்க் கொண்டிருக்கிறது. இது நீடூழி வாழ்வதாக! உள்நாட்டுக்கு வருட சந்தா ரூ 1—0—0 வெளிநாட்டுக்கு ரூ. 1—8—0 யாகும். புத்தக ரூபங்கொண்டது.

'குடி அரசு' ஈரோடு.

'நவமணி.'

இராமனுதபுரம் ஜில்லா, பள்ளத்தூரினின்றும் திருவாளர் சி. ரா. ம. ராமனுதன் அவர்கள் ஆசிரியத் தலைமையினின்று வெளிவரும் நவமணி என்ற தமிழ் மாத சஞ்சிகையின் இரண்டாவதாண்டு முதல் இதழ் வரப்பெற்றோம். இதில் நல்ல தமிழில் பல அறிஞர்களாலும், மேதாவிகளாலும் எழுதப்பட்ட பல வியாசங்கள் காணப்படுகின்றன, சுகாதாரப்பகுதி, கதை பகுதி, சிறுவர் பகுதி முதலியவை வெவ்வேறாக பிரித்தெழுதப்பட்டிருக்கின்றன.

மதிப்புரை.

'சைவ பரிபாலனம்.'

[இது திருச்சி பொன்மலையிலிருந்து திரு. கந்தசாமித் தம்பிரான் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை. இதன் வருட சந்தா உள்நாடு ரூபாய் 2—8—0 வெளி நாடு ரூபாய் 3—8—0.]

இதன் 11-வது ஆண்டு முதலாவது பதிப்பு நமதுபார்வைக்கு வரப்பெற்றோம். இது ஏனைய சைவப் பத்திரிகைகள் போன்று பிடிவாதமாகப் பழையனவற்றையே பரிந்து பேசாமல் சைவர்கள் பாலும் மடாதிபதிகள் பாலுமுள்ள குற்றங்களை தைரியத்துடன் எடுத்தோதுவதோடு புதிய சீர்திருத்த விஷயங்களிலும் கவனத்தைச் செலுத்தியுள்ளது மிக்க விசேடமாகும். பொதுவாகத் தமிழறிஞர்களும் சிறப்பாகச் சைவர்களும் இதை வாங்கிப்படித்து இதன் ஆசிரியருக்கு மேன்மேலும் ஊக்கமூட்டவேண்டுவதோடு சைவபரிபாலனம் புகழ்பெற வாழவேண்டுகிறோம்.

'நவீன பாரதி.'

[இது மதுரை ஜில்லா, உத்தமபாளையத்திலிருந்து ரா. சுப்பிரமண்யம் அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளிவரும் செந்தமிழ்த் தேசீய மாத சஞ்சிகை. இதன் வருட சந்தா உள்நாடு ரூ 2—0—0. வெளிநாடு ரூ. 2—8—0.]

இதன் மாலை 3. மலர் 1, 2. வரப்பெற்றோம். இது முன் பாரதியாக வெளிவந்த உயர்தர தேசீயப் பத்திரிகைக்கு அரசாங்கத்தாரின் அவசர அச்சுச் சட்டத்தால் ஏற்பட்ட சங்கடத்தினின்றும் சந்தாதார்களைக் களிப்புறச் செய்யவும் தமது தேசியப்பற்றை வெளிப்படுத்தவும் பாரதி ஆசிரியர் திரு. ரா. நாராயணசாமி அவர்கள் சிறை சென்ற பின்னர் திரு. சுப்பிரமண்யமவர்களால் வெளியிடப்படும் சஞ்சிகையென்றால் இதன் உயர்வைப்பற்றி மேலே சொல்லுவானேன். நயம் கிளேஸ் பேப்பரில் அழகிய ஆப்டோன் படங்களுடனும் 80 பக்கங்களோடும் உயர்ந்த அறிஞர்களின் பல்வேறு சீர்திருத்தக் கட்டுரைகளோடும் தற்கால உலகிற்கின்றியமையாத முறையில் வெளிவரும் ஓர் செந்தமிழ்ச் சஞ்சிகை இதுவேயாகையால் தமிழர் யாவரும் இதனை ஏற்றுப் போதிய ஆதரவு கொடுக்கவேண்டுகிறோம். 'நவீன பாரதி' நீடூழி வாழ்ந்து நாட்டிற்கு நலம் பல புரியப் பரமனை வேண்டுகின்றோம்.

ஆனந்த போதினி.

சுத்த திருக்கணித பிரஜோர்பத்தி பஞ்சாங்கம்.

[இது C. G. ராஜன், B. A., (Mathematics) அவர்களால் கணிக்கப்பெற்று நாகவேடு, நா. முனிசாமி முதலியார் அவர்களால் தமது ஆனந்தபோதினி அச்சுக்கூடத்திலிருந்து வெளியிடப்பட்டது. இதன் விலை அணு 2.]

இதன் பிரதி ஒன்று நமது பார்வைக்கு வரப்பெற்றோம். இது சுத்தமாகவும் தனித்தனியாகவும் எல்லா விசேடங்களையும் ஜோதிடக் குறிப்புக்களையும் தினசரி பஞ்சாங்கக் குறிப்புக்களையும் பல்வேறு பிரதேசங்களின் மணியையும் அமிர்தாதி யோகங்களையும் அழகாக 88 பக்கங்களில் அச்சிட்டுவெளியிடப்பட்டுள்ளது. இதன் விஷயப் பெருக்கிற்கு இதற்குக் குறிப்பிட்டிருக்கும் விலைமிகக் குறைவாகையால் யாவரும் இப்பஞ்சாங்கத்தைப் பெற்றுப்பயனடைய வேண்டுகிறோம்.

பெண்ணா? பிணமா?

[இது காரைக்குடி நல உரிமைத்தொண்டர் சங்கத்தின் மூன்றுவதாண்டு விழாவில் நார்ச்சியாபுரம் உண்மை விளக்க நிலையம் மாணவி சி. மே. கிளிமொழியாள் என்ற சிறுமிசெய்த சொற்பெருக்கு. திருவாளர், முரு. செல்லப்ப செட்டியாரவர்களின் பொருளுதவி பெற்று அரிமழம், ஸ்ரீமீனுக்ஷி சுந்தர வாசகசாலையாரால் வெளியிடப்பெற்றுள்ள துண்டுப் பிரசுரம். வேண்டுவோர் மேற்படி வாசகசாலையாருக்கு ஒரு அணு ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.]

இதில் பெண்மக்களை ஆண்மக்கள் செய்யும் அட்டூழியங்களையும் அறியாச்செயலையும் நன்முக எடுத்துக்காட்டியிருப்பதோடு ஆண் பெண் சீர்திருத்தத்திற்கு வேண்டிய பல போதனைகளும் அடங்கியுள்ளன. இக்குழந்தைபோன்ற மாணவிகளுக்குக் கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் ஆரம்பம் முதலே வீணான கடின பதங்களைப்பிரயோகிக்கக் கற்றுக்கொடாமல் அன்பான முறையில் இனிய சொற்களையே பேசப்பழக்குதல் நலம்.

மணியொளி.

சமாதானம் பெற்றது.

இந்திய தேசியப்போர் சமாதானம் பெற்ற செய்திகேட்ட ஒவ்வோர்வரும் சந்தோஷிப்பர் என எண்ணுகிறோம். இதுகாறும் இந்திய தேச சரித்திரத்தில் நடைபெற்ற இந்தியாவின் சிரேஷ்ட காரியங்களில் இது பிரதானமாயும் விசேஷமாயும் விளங்கும். உலக சரித்திரத்தில் இப்போர் பற்றிய விடயம் பொன்னெழுத்துக்களால் எழுதப்படும். இம்மஹத்தான போரை நிறுத்தி வெற்றியுடன் ராஜி செய்துகொள்ள சர்க்கார் சார்பாகக் கனம். இராஜப் பிரதிநிதி அவர்களும் இந்தியர் சார்பாக மஹாத்மாஜீ அவர்களும் எடுத்துகொண்ட சிரமமும் அவர்களின் விடாமுயற்சியும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் போற்றத்தகுந்ததாகும். இதில் மத்தியில் நின்று வெற்றிபெறச்செய்த மகாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள், ஸ்ரீமான் ஜயகர், சர்சாப்ரூ பண்டித மாளவியா போன்ற மேதாவிகளின் உதவிக்கு நாம் நன்றி செலுத்துகிறோம். போர் சமாதானம் பெற்றது நல்லதா, தீதா? என்பதுபற்றிய நமது அபிப்பிராயத்தை அடுத்த மணியில் விரித்துத்தருவாம். அது எவ்வாறாயினும் நாம்சமாதானத்தை வரவேற்கிறோம் தேசிய மஹாசபையின் ஆணைக்கிணங்க யாவரும் அதை ஒப்புக்கொள்ளும்படி வற்புறுத்துகிறோம்.

தேசிய மஹா சபை.

தேசியப்போர் காரணமாகவும் எல்லாத் தலைவர்களும்ஜயிலில் இருந்தது காரணமாகவும் சென்ற பல மாதங்களுக்கு முன் நடைபெறவேண்டிய இந்திய தேசிய மஹாசபை இந்திய தேசியப்போர் சமாதர்னம் நிலவிய பின்னர் இப்பொழுது நடைபெறப்போகிறது. அதன் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் வீரர் சர்தார் வல்லபாய் படேல் அவர்களை யாவரும் நன்கறிவர். உயர்ந்த நோக்கும் பரந்த எண்ணமும் வீர நெஞ்சமும் படைத்த இந்தியத் தலைவராம் சர்தார் படேல் அவர்கள் தலைமையில் இச்சிக்கலான நேரத்தில் நடைபெறப்போகும் தேசிய மஹாசபை இப்பொழுதைய இந்திய சர்க்காரின் மனப்பான்மைகண்டு சரியான முறையில்உருவான வேலைத்திட்டத்தைத் தயார்செய்து, இந்தியர் முன்னேற்றமடைய வழி தேட வேண்டுவதும் அதன் அபிவிர்த்தியில் புதிய தலைவர்

இன்னும் அதிக வேலை செய்யவேண்டுவதும் நாம் எதிர்பார்க்கக் கூடிய விஷயமே! அதன்படி தேசிய மஹா சபை சிறப்போடும் வெற்றியோடும் நடைபெற இறைவன் துணைவேண்டுகிறோம். இப்போதைய தலைவர் வீரர் ஜாவேரிலால் ஜீயின் உள்ளம் இந்தியரைக் கவர்ச்சி கொண்டுவிட்டது. இவ்வாண்டில் அவருடைய தலைமையில் தேசிய மஹாசபை ஆற்றியுள்ள அரும்பெருஞ் செயல்கள் என்றும் போற்றப்படும். இன்னும் வீரர் ஜவேரிலால்ஜீ பூரண விடுதலை கிட்டும் வரை மஹாத்மாஜீயுடன் ஒத்துழைப்பாரென எதிர்பார்க்கிறோம்.

இந்திய வரவு செலவு.

இந்திய சட்டசபையில் பொக்கிஷ மந்திரி அவர்கள் ஆஜர் செய்த புதிய வரவு செலவு திட்டத்தின்படி பழைய செலவினங்களிலிருந்து இராணுவச்செலவில் 175 லக்ஷம் ரூபாயும் பல்வேறு சிவில் இலாக்காக்களின் செலவு திட்டத்தில் 98 லக்ஷம் ரூபாயும் குறைவு செய்த போதிலும் 14 கோடியே 51 லக்ஷம் ரூபாய் வரவுக்கு மிஞ்சிய செலவேற்படுகிறதாம். இதற்காகப் புதிய சில வரிகளை உற்பத்தி செய்ய ஓர் திட்டமும் தயார் செய்து அதையும் வரவு செலவு திட்டத்துடன் ஆஜர் செய்துள்ளார். இந்தியர் இப்பொழுதுள்ள வரியே தாங்கமுடியாமல் தவிக்கும்பொழுது புதிய வரி காண்பதும் பழைய வரிகளை இன்னும் உயர்த்துவதும் நடந்துகொண்டே தானிருக்கிறது. நூதன நாகரீகங்களில் ஜனங்களை மூழ்கச்செய்து செலவினத்தை அதிகப்படுத்துவதைமட்டுப்படுத்தி செலவினத்தைக் குறைப்பதுதான் நலமேயல்லாமல் புதிய வரி காண்பதால் சிரமமே அதிகரிக்கும். ஆனால் புதியவரி யோஜனை ஏழைகள் பங்காகத் திரும்பாதது ஓர் நற்செய்தியாகும்.

சென்னை வரவு செலவு.

நமது சென்னை மாகாண வரவு செலவு திட்டம் சென்னைச் சட்டசபைக்கு வந்தது. அதில் விசேட குறையொன்றுமில்லையாயினும் சீர்திருத்தஞ் செய்யவேண்டிய பல விஷயங்களும் இன்னும் அநேக விஷயங்களில் செலவைக் குறைக்க வழிதேடவேண்டியதும் அவசியமாகும். ஆயினும் கலால் வரியை அடியோடு எடுத்துவிடவேண்டுமென்ற விஷயம் நடைமுறையில் வருமானால் மிகுந்த நன்மை பயக்கும். அத்துடன் முன் திட்டப்படி குடிமறுப்புப் பிரசாரம் மேலும் ஜயமுடன் நடக்கச் செய்யவேண்டுவது இன்றியமையாததொன்றாகும்.

நாற்றிசை நடப்பு.

அமெரிக்கா சென்றார்கள்.

பள்ளத்தூர், திவான்பஹதூர் அ. மு. மு. முருகப்ப செட்டியாரவர்களின் புத்திரர் திரு. முருகப்பசெட்டியாரவர்களும் கானாடுகாத்தான் திரு. வெ. வீர. சுப்பையா செட்டியாரவர்களும் அமெரிக்காவில் வாஷிங்டனில் நடைபெறும் சர்வதேச வியாபாரச் சங்க மஹா நாட்டிற்கு ஆஜராவதின் நிமித்தம் (இரங்கூன் நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கப்பிரதிநிதிகளாக) இவடமிருந்துபிரயாணமாகி கொழும்பு மார்க்கஞ் சென்றார்கள். அங்கிருந்து ஐரோப்பா முதலான பலவிடங்களையுஞ் சுற்றிப்பார்த்துக்கொண்டு தங்கள் தாய்நாடு திரும்புவார்களென அறிகிறோம். நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் சங்கப்பிரதிநிதிகளாக முதலில் வெளிநாடு செல்லும் இவர்கள் பிரயாணம் எல்லா வகையாலும் சௌகர்யம்பெற்றும் கோரிய காரியம் ஜயம்பெற்றும் நாடுவந்து சேர இறைவன் துணை செய்யவேண்டி வாழ்த்துகிறோம்.

கொடி வணக்கம்.

காரைக்குடி காந்தி சௌக்கில் 12—3—31ௗ டாண்டி தினத்தை உத்தேசித்துக் கொடிவணக்கஞ் செய்ய விவேகாநந்தா நேஷனல் சேவாதளத்தைச் சேர்ந்த N. S. கணபதி அவர்களால் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்ததற்கேற்ப அன்று மாலை 5-மணிக்கு ஓர் பெருங்கூட்டங்கூடிக் கொடிவணக்கஞ் செய்யப்பெற்றது. அப்பொழுது திருவாளர்களான ஜீவானந்தன், N. S. கணபதி 'நவமணி' ஆசிரியர் சி. ராம. இராமனுதன் முதலானோர் சமாதான நிலைபற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள்.

சமாதானம்.

இந்திய சர்க்கார் சார்பாக இந்திய ராஜப்பிரதிநிதி லார்டு இர்வின்பிரபுவிற்கும்காங்கிரசின் சார்பாக மஹாத்மா காந்திஜீக்கும் தேசியக்கிளர்ச்சி காரணமாக சமாதானஞ் செய்துகொண்டதை இந்திய சர்க்காரும் தேசீய மஹா சபையாரும் ஒப்புக்கொண்டு விட்டனர். அதன்படி சட்டமறுப்பியக்கமும் நிறுத்தப்பட்டு, ஜயிலிலுள்ள தேசிய வீரர்கள் யாவரும் வெளிவருகின்றனர்.

புதிய மஹா நாடு.

இந்த ஒப்பந்தத்தின்படி மற்றோர் வட்டமேஜை மஹாநாடு இந்தியா மந்திரி தலைமையில் இந்தியாவிலேயே நடைபெற ஏற்பாடு

கள் செய்யப்படுமென எதிர்பாக்கப்பட்டது. ஆனால் அது மீண்டும் லண்டனிலேயே கூடுமென இப்பொழுது யூகிக்கப்படுகிறது.

காங்கிரஸ் மஹா நாடு.

சென்ற வருஷம் கூடவேண்டிய காங்கிரஸ் மஹா சபை இப்பொழுது கராச்சியில் நடைபெறப்போகிறது. சர்தார்வல்லபாய் படேல்ஜீ தலைமை வகிப்பார். கொட்டகை வேலைகள்பாவும் முடிவுற்றன. மின்சாரவேலை, தண்ணீர் வசதி, முதலியன யாவும் செய்யப்பெற்றுள்ளதோடு தபால், தந்தி, டெலிபோன் முதலியவைகளும் காங்கிரஸ் ஸ்தலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. காங்கிரஸ் கூடுமிடத்திற்கு 'ஹரிச்சந்திரா நகர் எனப்பெயர். சுமார் 2½ லக்ஷம் ரூபாய் வரவு வருமென எதிர்பார்த்துச் செலவு திட்டம் போடப்பட்டிருக்கிறது.

இதர மஹா நாடுகள்.

வழக்கம்போல் காங்கிரஸ் வாரத்தில் அவ்வளவு அதிகமான மஹா நாடுகள் கூடாதாயினும் பல மஹா நாடுகள் தனித்தனி நடைபெறுமெனத் தெரிகிறது. கதர்க்காக்ஷி சாலையும் வைக்க ஏற்பாடாகியுள்ளது.

சபர்மதி செல்லமாட்டார்.

தான் டாண்டி உப்பளத்திற்குப் பிறப்பிடும்பொழுது சுயராஜ்யமில்லாமல் சத்தியாக்கிரஹ ஆச்ரமம் திரும்பமாட்டேனெனச் சொன்ன சொல்லிற்கேற்ப சுயராஜ்யம் கிட்டும் வரை சபர்மதி ஆசிரமம் வரமாட்டேனென மகாத்மாஜீ கூறிவிட்டார். இனி ஆமதாபாத்திலேயே தங்கி இதரவேலைகளைக் கவனிப்பார்.

சேட்டியார் விமானி.

ஆகாய விமானத்தில் இந்தியர் பலர் பயிற்சிபெற்றுப் பல பாகங்களுக்கும் பறந்து செல்லுகின்றனர். என்பது யாவரும் அறிந்ததே. அதேபோன்று காரைக்குடியில் செட்டியார் வகுப்பில் ஆர்வமிக்குடையாரான திரு. வெ. ராம. ஆவுடையப்ப செட்டியார் என்ற 20 வயதுள்ள இளைஞர் ஒருவர் சென்னை ஆகாய விமான சங்கத்தில் அங்கம்பெற்று பறப்பதில் தேர்ச்சியடைந்து முதல்தரமான சர்டிபிகேட்டுப் பெற்றுள்ளார். அத்துடன் சொந்தத்தில் ஓர் சிறு விமானமொன்றும் வாங்கியிருக்கிறார். இப்பொழுது முதலில் இந்தியாவெங்கும் பறந்து சுற்றிப்பார்த்துவிட்டுப் பின்னர் வெளிநாடுகளுஞ் செல்ல எண்ணியிருப்பதாகத் தெரிகிறது. இவ்விளைஞரின் அரியமுயற்சி ஜயம்பெறஇறைவன்அருள்பாலிப்பாராக.

நமது "நவமணி"

சென்ற தையிலிருந்து நமது 'நவமணி'க்கு இரண்டாவதாண்டாகும் புதிய ஆண்டில் உயர்ந்த பல அறிஞர்களின் கட்டுரை கொண்டும் பல்வேறு வேடிக்கைப் பகுதிகள் தாங்கியும் பெண்கள் முன்னேற்றத்திற்கும் பெண் சமூக சீர்திருத்தத்திற்கும் வேண்டிய நூதன ஆராய்ச்சிகள் திகழப்பெற்றும் அதிக பக்கங்களோடும் வெளிவருகிறது. உடனே நீங்கள் ஒவ்வொருவரும் சந்தாதாரராகச் சேருங்கள்.

விளம்பரக் காரர்களுக்கு.

இந்தியா, பர்மா, மலேயா முதலிய இடங்களில் இப்பொழுது நமது பிரதிநிதிகள் வேலைசெய்ததின் காரணமாக நமது பத்திரிகையின் சந்தாதார் தொகை அதிகமாகிவருகிறதென்பது நாம் சொல்லாமலே அறிந்து கொள்ளக்கூடியது. இப்பொழுதே விளம்பரம் ஒப்பந்தஞ் செய்துகொண்டால் குறைந்த ரேட்டில் செய்துகொள்ளலாம். எனவே, ஒவ்வோர் விளம்பரக்காரர்களும் தங்கள் விளம்பரங்களை நமது 'நவமணி'யில் வெளிவரச்செய்து நல்ல பலன் பெறுவார்களென எதிர்பார்க்கிறோம்.

விளம்பர விகிதம்.

முழுப்பக்கம்	ரூபாய் 7--0—0
அரைப்பக்கம்	ரூபாய் 4-—0—0
அட்டை முழுப்பக்கம்	ரூபாய் 10—0-0
அரைப்பக்கம்	ரூபாய் 6—0—0

நீடித்த விளம்பரங்களுக்கு எழுதித்தெரிந்து கொள்ளவும்

மானேஜர்.

"நவமணி" பத்திரிகாலயம்

பள்ளத்தூர். ராமநாதபுரஞ் ஜில்லா.

Regd. No M. 2646.

உ

சுத்தக் கதர்! சுத்தக் கதர்!!

பள்ளத்தூர் வாசிகள் நீண்ட நாளாக கதர்
கிடைக்கவில்லை என்ற குறை நீங்கி
விட்டது. சுத்தக்கதர், ராஜ
பாளையம் நைஸ் கதர்
வகைகள் யாவும்
எங்களிடம்
குறைந்த விலையில் கிடைக்கும்.

மானேஜர்,

நவமணி பத்திரிகாலயம்,

பள்ளத்தூர்.

உயர்ந்த வேலை! குறைந்த கூலி!!

நாங்கள்
எல்லாவித எலக்டிரிக்
வயரிங் கண்டிராக்டுகளையும்
ஒப்புக்கொண்டு உயர்ந்த முறையில்
குறைந்த கூலியில் கடந்த பல ஆண்டு
களாக வேலைசெய்து வருகிறோம். புதிய பல
வேலைகளையும் ஒப்புக்கொண்டு நன்றாகச்
செய்துதரத் தயாராக வுள்ளோம்.
ஓர் முறை ஆர்டர் கொடுத்து
எங்கள் திறமையைப்
பாருங்கள்.

T. R. ரெங்கசாமி,

பள்ளத்தூர்.

Printed & Published by S. RM. Ramanatha Mudaliar,
at Vedhambal Press, Pallatur. (Ramnad Dt.)